
# ஆத்மஜோதி

பங்குனி — சித்திரை — 1980



அகண்ட பரிபூரண

சச்சிதானந்த சற்குரு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 32 — பங்குனி – சித்திரை (15-4-80) சுடர்: 5-6


## பொருளடக்கம்


| | |
|---|---|
| குருவும் ஈசனும் — | 193 |
| சச்சிதானந்த சற்குரு சுவாமிகள் அருளுரை — | 194 |
| சச்சிதானந்த சற்குருசுவாமிகள் — | 195 |
| திருக்குறளில் பஞ்சாமிர்தம் — | 201 |
| சுவாமி ராமதாஸ் அருளுரை (42) — | 205 |
| வளர்ந்துவரும் இரத்தினகிரி தேவஸ்தானம் — | 206 |
| தொண்டை மண்டலத்தின் தொன்மையும் மேன்மையும் — | 209 |
| மனிதரின் உணவு மாமிசமா? மரக்கறியா? — | 213 |
| ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்து சமயம் — | 217 |
| நிலையாமை — | 222 |
| பல்கலைக்கழகத்துடன் பதினைந்து நாட்கள் — | 223 |
| சைவசமய கலாச்சாரம் குன்றும் அபாயம் — | 229 |
| சுத்த சாதகம் — | 231 |
| அன்பினில் விளைந்த ஆரமுது — | 234 |


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்,

**அன்பு வணக்கம்**

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 32ஆவது ஆண்டு ஐந்து-ஆறுவது சுடராகும். கடந்த 31 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 15 ரூபாவை அனுப்பிவைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்துவைத்தால் ஜோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலையம், நா. முத்தையா
நாவலப்பிட்டி. (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவும் ஈசனும்

சச்சிதானந்தசற்குரு

குருவாக்கை மனதில் வைத்து ஆழ்ந்து பார்த்திருப்பதுவே உபதேசம்.

எம்மதஸ்தரும் குருத்தொண்டு செய்வது அவசியம்.

குருவாக்கியமே புனித தீர்த்தம்.

ஒரு ஜீவனுக்குச் சகல சுகத்தையும் கொடுப்பது குருவே.

சரீரம் இருக்கும் வரை குருவைப் பூஜிக்க வேண்டும்.

பகுத்தறிவுள்ளவன் தத்துவஞானியை அடைவான்.

நீ வந்த வேலை என்ன?
தன்னையறிந்து தலைவனைக் காண்பது.

கடவுளை நாம் காப்பாற்ற வேண்டும்.

தினையளவாகிலும் மனதினில் கபடமில்லாது இருப்பதுவே யோகம்.

சத்தியம் காப்பதுவே விரதம்,

உள்ளும் புறம்பும் உண்மையே பேசு.

தாமரை நீர்போல் தரணியில் வாழ்ந்திடு.

இதயக்கோயிலில் இறைவனைஇருத்து.
ஈசனை நேசமாகக் கொள்.

சும்மா இருக்கும்போது தன்மனம் அடக்கிப் பழகு.

தன்னை உணரும்வரை ஜீவன் பொய்;
தன்னை உணர்ந்தால் ஜீவன் மெய்.

துக்கம் விட்டால் ஞானம்.
ஆசை விட்டால் ஆனந்தம்.

காண்பதெல்லாம் அழியுமென்று
கருத்தில் நிச்சயமாகக் கருதிக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சச்சிதானந்த சற்குரு சுவாமிகள்

# அருளுரை

### மாயையின் பிரலாபமும், சுற்றத்தாரியல்பும் உணர்த்துதல்

காலமோ கடந்துபோகக் கருத்தினையடக்கும் நேரம்
ஓலமிட்டலறுமாயை உடையவனருளிருக்க
மாலவ னெனக்குத் தந்தை மலர்மக ளென்றன் மாதா
சீலமாரடியார் சுற்றம் சிறப்பிது செப்பினேனே.

### மாயா காரியங்களை அகற்றுகிற மார்க்கம் அறிவித்தல்

எண்ணூறுகோடி காலமிருந்து தவம் புரிந்திட்டாலும்
பண்ணூர்ந்த மாதர் மையல்பாகமா யறுத்திட்டாலும்
உண்ணுத வமுதுமுண்டு உடலெல்லாங் குளிர்ந்திட்டாலும்
விண்ணுடு பெற்றிட்டாலும் வேண்டிலேன் விமலவாழ்வே.

### ஞானிகளின் பெருமை

ஞாலமுண்டவன் தலைமிசை சுமப்பன்
மெய்ஞ்ஞானி வேண்டுவ தெல்லாம்
ஆலமுண்டவன் அவன் பின்னே திரிகுவன்
அவனடி துகள்க்கன்றே
சீலமன்னரும் மற்றுள்ள தேவரும்
திசைதிசை பணிந்தேத்தக்
காலிரண்டையும் தலைமிசைவை யெனக்
கழறுவன் கமலத்தோன்.

### இறைவனது ஏகாந்த நாட்டைக் குறிப்பிற் காட்டுதல்

ஒருவரு மறியாநாட்டில் ஒருவரும் போகா நாட்டில்
இருவர் களுலவா நாட்டில் இன்பங்களிசையா நாட்டில்
வருவது மிலாத நாட்டில் வானவர் செல்லா நாட்டில்
திருவருளிலகு நாட்டில் தெய்வமே சேர்ப்பிப்பாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சிதானந்த சற்குருசுவாமிகள்

ஆசிரியர்

சுவாமிகளுடைய திரு அவதாரம் நிகழ்ந்த இடம் திண்டி மாநகரமாகும். சுவாமிகளுடைய பூர்வாச்சிரமத்தை யாரும் அறியார். மக்கள் அன்பினோடும் தான் தோன்றித் தம்பிரான் என அழைத்தனர். சுவாமிகள் தேச சஞ்சாரம் செய்ய விரும்பினுர்கள். முதலில் கேரளம், கன்னியா குமரி, தெற்குமலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்றூர்கள். அங்குள்ள பக்த கோடிகளுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் விளக்கி அருளினுர்கள்.

சச்சிதானந்தமே உண்மைப்பொருள்; ஒன்றே கடவுள்; அதுவே வீர சைவம்; சீவனைச் சிவமாக்குவதே ஜீவகாருண்யம் என்று உபதேசித்தார். ஆலய வழிபாட்டின் ஆபாசங்களைக் கண்டித்தார். பின் மேற்குத் திசை நோக்கிப் புறப்பட்டார். அங்குச் சஞ்சாரம் செய்த போது அங்குள்ள அன்பர்களுக்கெல்லாம் ஞான உபதேசங்களை விளக்கினுர். பின் வடதிசையில் புறப்பட்டு வடக்கு மலையாள மார்க்கமாகச் சென்று அங்குள்ள அன்பர்களுக்கு வேதவாக்கிற்கும் அனுபவத்திற்கும் உள்ள பேதா பேதங்களைப் பிரித்துக் காட்டினுர். அங்கிருந்து கோகர்ணம் சென்று ஒன்றே கடவுள் உணர்வே பிரம்மம் என்று தெளிவுறுத்தினுர்.

பின்பு கொண்டாரண்யம் என்ற வனத்திற்குச் சென்றூர். அது துஷ்ட மிருகங்கள் நிறைந்த மரங்கள் அடர்ந்த கானகம். சுவாமி செல்லும் போது கொடிய விலங்குகளும் சுவாமி மீது உரோஞ்சிக் கொண்டு செல்லும். மனித சஞ்சாரமே கிடையாது. மலைப்பாம்புகள் பின்னிக்கிடக்கும். சுவாமிகள் வடதிசையாகப் பிரயாணஞ் செய்து நாசிக் பஞ்சவடி என்னும் க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அங்கு இலட்சுமணன் தவஞ்செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவடிக்குக் கீழ்ப் பாகத்தில் சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் பெரிய மலைக்குகை ஒன்றிருந்தது. மனித சஞ்சாரமற்ற அக்குகையில் சுவாமிகள் சில காலம் தவம் செய்தார்கள். சுமார் ஒரு மைல் தூரத்திற்கப்பால் காடவர் என்ற சாதியினர் இருந்தனர். சுவாமியைக் கண்ட நாள்முதல் அவர்கள் பயபக்தியோடு சுவாமிக்கு வேண்டிய உணவோடு வந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் காத்து இருப்பர். சுவாமிகள் வந்து ஆகாரம் எடுத்துக்கொண்ட பிறகுதான் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள். காடவர் என்பது காட்டில் வசிக்கும் மராட்டிய சாதியைச் சேர்ந்தவர்கள்.

சுவாமிகள் அங்கிருந்து பம்பாய் சென்று அங்குள்ள அசோகா புல் தோட்டத்தில் தங்கி இருந்தார்கள். அங்கு ஒரு சாது சங்கத்தைக்கூட்டி ஆத்மீக விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தன்னை அறிவதுதான் தவம்; காண்பானைக் காண்பவனே கற்றவன்; யோகம் அறுபத்துநான்கில் ஞானயோகமே சிரேஷ்டமானது. அந்த ஞானயோகம் சற்குருவின் கிருபாகடாட்சத்திலேயே கிடைக்கும் என்பதே சுவாமிகளுடைய உபதேசமாகும். பின்பு காசி மார்க்கமாகச் சுவாமிகள் சென்றார்கள். செல்லும் வழியில் சருகுகள் மாத்திரமே உணவாகக் கிடைத்தன. சேற்று நீரே தாகத்திற்கு உதவின. சுவாமிகள் ஐதராபாத் சென்றடைந்த பொழுது ஒரு சாது சுவாமிக்குத் தொண்டனாக வந்து சேர்ந்தார். அச்சமயம் சுவாமிகள் தீவிர வைராக்கிய மௌனமாய் இருந்தபடியினால் அந்தச் சாது சுவாமிகளின் குறிப்பறிந்து தொண்டாற்றி வந்தார். அதனால் அச்சாது குறிப்பறியும் தொண்டனார் என்ற நாமத்தையும் பெற்றார்.

சுவாமியுடன் சாதுவும் காசிக்குச் சென்றார். காசியில் அரிச்சந்திரன் கட்டம் என்ற இடத்தில் தங்கியிருந்த சுவாமிகள் தீவிரசாதனைகளை மேற்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு சிலகாலம் காசி விசுவநாதர் கோயிலில் தங்கி இருந்தார்கள். அங்கிருந்து வடக்கே அயோத்திக்குச் சென்றார்கள். சுவாமிக்குப் பசித்த காலங்களில் அவ் வூர்ச்சனங்கள் ஆகாரங் கொண்டுவந்து கொடுத்தார் கள். சாப்பாட்டிற்காக சுவாமியை ஒரு மனிதன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அந்த வீடு நான்கு கால்கள் நாட்டிய ஒரு சிறு குடிசை. அந்த வீட்டிற்குள் நுழைய வேண்டுமானால் உட்கார்ந்துதான் செல்ல வேண் டும். வீட்டுக்காரன் குடிசையில் சுவாமிகளையும் சாது வையும் புல்லாசனத்தில் இருத்திவிட்டு வெளியே சென்று விட்டான். அப்போது காலை 10 மணி இருக்கும். வெளியே சென்ற மனிதன் அவ்வூர்க் கோயில் குருக்கள் ஆவார். அவர் மாலை 6 மணிக்குத் தனது சீடனுடன் சில சோளட்டோரி உருண்டைகளையும் கொண்டுவந்து சேர்ந்தார். சுவாமிகளும் சாதுவும் அதனைக் கண்ணபி ரானுக்குக் குசேலர் கொடுத்த அவல் மாதிரி இருக்கி றது என்று புகழ்ந்துகொண்டே சாப்பிட்டார்கள்.

சுவாமிகளும் சாதுவும் நடந்து கொண்டிருந்தார்கள். சுவாமிகளுடைய வெறுங்காலை கல்லும் முள்ளும் பதம் பார்த்தன. காலில் இரத்தம் கசிந்தது. சுவாமிகளுடைய காலைப்பார்த்த ஜனங்கள் ஒரு ஜோடி செருப்புக்கொண்டு வந்து கொடுத்தார்கள். சுவாமிகள் விளையாட்டாக அத னைப் போட்டுப் பார்த்துவிட்டு, ''சீச்சீ சரீரஅபிமானம் உள்ளவர்கள் அல்லவா இதனைப்போடவேண்டும்'' என்று கூறிக்கொண்டே அதனைக் கழற்றி எறிந்து விட்டார்கள். பின்னர் பிரயாகை, ஹரித்துவாரம், குருக்ஷேத்திரம், ரிஷி கேசம் போன்ற இடங்களிலும் சுவாமிகளுடைய இதோப தேசம் நடைபெற்றது. நாம் கடவுளை உண்மையாக தியா னம் செய்தால், நாங்கள் எங்கிருந்தாலும் ஆங்காங்கே பெரியோர்களுடைய தரிசனம் கிடைக்கும் என்று சுவாமி கள் அருளிச் செய்தார்கள். சுவாமிகள் தெலுங்கு இராச்சி யத்தினூடாகத் தென்னாட்டுக்கு வந்தார்கள். சோழ நாட் டின் புண்ணியக்ஷேத்திரமாகிய வைத்தீஸ்வரன்கோயிலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தார்கள். அங்கு இரண்டுவருடகாலம் அவ தூதராக உலவினர். அதன்பின் சீர்காழி வந்து, அங்கிருந்து சிதம்பரம் வந்துசேர்ந்தார்கள். சிதம்பரத்தில் பலர் வந்து தரிசித்தார்கள். அவர்களுக்குச் சுவாமிகள் ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை. ஞானத்தில்யோகம், ஞானத்தில் ஞானம் என்பவற்றை உபதேசித்தார்கள்.

சுவாமிகள் பின் வரும் உபதேசத்தைப் பல இடங்களில் மக்களுக்குச் செய்தார்கள். சச்சிதானந்தம் ஒன்றே கடவுள்; சீவனைச் சிவம் ஆக்குவதே சீவகாருண்யம்; கடவுளுக்கு மனைவிமக்கள் கிடையாது; மனைவிமக்கள் எல்லாம் மனதினுடைய கொடுமை; இந்தப் பிரபஞ்சம் எல்லாம் தர்மம் குறைந்து, அதர்மம் மேலிட்டு, அக்கிரமவேலி கட்டி, அட்டூழிய பாத்திகட்டி, அகங்காரவிதையூன்றி, சீவர்களைப் பாமரர்களாக்கி தமோகுணமென்ற கிளைகளோடு தத்துவங்களே பூவாகி, அதன் சேடிப்புகளே காயாகிக் கனியாகிப் பழுத்து நாஸ்திகம் மேலிட்டு ஆஸ்திக தர்மம் குன்றி, மெய்யடியார்களுக்கு இடையூறு அதிகரித்து தெய்வீகம் நசித்து விட்டதாகப் பிரச்சாரம் செய்தார்கள்.

சுவாமிகள் இலங்கைக்கும் வந்து தர்மப்பிரச்சாரம் செய்துள்ளார்கள். இலங்கையிலிருந்து கப்பலேறி நாகபட்டினம் சென்று பல தலங்களையும் பல கிராமங்களையும் தரிசித்துக்கொண்டே வடலூர்மார்க்கமாக மோகனூர், காட்டுப்புத்தூர், வேலூர், கரூர் முதலாம் இடங்களுக்கும் சென்றார்கள். பின் திருச்சிவந்து சுவாமிகள் திருவானைக்காவலில் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள். வடநாட்டிலுள்ள ஒரு அன்பர் ''தனது குருநாதர் திருவானைக்காவலில் உள்ளார்'' என்பதைக்கனவில்கண்டு திருவானைக்கா வந்து சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுத்திரும்பினர்.

சதிபதிகள் இருவர் சுவாமிகளிடம் அன்புள்ளவர்கள். ஒருநாள் காவேரியில் இருவரும் ஸ்நானம் செய்யும் போது திடீரென வந்த காற்றுவெள்ளம் அவர்களை அடித்துச் சென்றது. அவர்கள் குருநாதா! குருநாதா! என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் எழுப்பினார்கள். உடனே அவர்களுக்குச் சுவாமிகளுடைய தரிசனை கிடைத்ததோடு வெள்ளத்தினின்று காப்பாற்றவும் பட்டார்கள்.

கணக்கன்பதி, பெட்டகம்பதி என்ற ஊர்களில் உள்ள அன்பர்கள் குருநாதர் ஞாபகார்த்தமாகக் குருபூஜை நடத்தினார்கள். அடுத்த மாதத்தில் சச்சிதானந்த சபை நிறுவி, சற்குருநாதர் பிரதி பிம்பஸ்தாபனம் செய்து, அன்று முதல் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது குருவார தினத்தில் குருபூஜை செய்து வந்தார்கள். அன்பர்கள் பெருந்தொகையாகக் கூடி இப்படிக் குருபூஜை செய்வது சில நாஸ்திகர்களுக்குப் பொறாமையை உண்டாக்கியது. இக்கற்சிலை பேசுமா? ஏன் வீணாகப் பொழுதைப் போக்குகிறீர்கள் என்று கிண்டலாகப் பேசியதோடு சவாலும் விட்டார்கள். குருபூஜை தொடங்கி பத்தாவது மாதக் குருபூஜை நடைபெறும்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஊர்வலம் புறப்படும் சமயம், எல்லாருக்கும் கேட்கும்படியும் நாஸ்திகர்களின் நெஞ்சம் கலங்கும்படியும் திருவுருவத்தில் நின்று ஓங்கார சப்தம் ஐந்து நிமிடம்வரை சப்தித்தது. ஜனங்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு இதுவரை பார்த்திராத நிகழ்ச்சியாக ஆரவாரம் செய்தார்கள்.

நாஸ்திகர் மட்டும் சந்தேகத்துடன் திருவுருவம் பேச முடியுமோ? இது யாரோ வேண்டுமென்று சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். அதேசமயம் மீண்டும் திருஉருவத்தினின்று "ஆணவத்தை விடுங்கள்" "நெஞ்சம் பிளக்கப்படும்" "ஜாக்கிரதை" என்ற வார்த்தைகள் ஒலிக்கப்பட்டதோடு நாஸ்திகர் நின்றபக்கம் வெடிகுண்டு போன்ற சத்தமும் கேட்டது. அவர்கள் பயந்து நாவிலும் பசையற்று, நெஞ்சு உலர்ந்து, குருநாதரை ஸ்தோத்திரம் செய்தார்கள். அன்று முதல் ஜனங்களுக்குப் பயபக்தி ஏற்பட்டு குருபூஜைக்கு ஏராளமான ஜனங்கள் வரத்தொடங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியலூர் புகையிரத விபத்தின்போது திருவையாற்று அன்பர்கள் இருவர் அப்புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் குருநாதா குருநாதா என்று குரல் கொடுத்தார்கள். அவ்விபத்தில் இந்த இருவரும் மாத்திரமே யாதோர் காயமும் இன்றித் தப்பித்தவர்கள். குஷ்டரோகி ஒருவர் சுவாமிகளிடம் தினமும் வந்து சுவாமிகளை வணங்கி அமைதியாக இருந்துவிட்டுச் செல்வார். ஒருநாள் சுவாமிகள் அவர் உடல் முழுவதையும் தமதிருகண்களாலும் பார்த்துக் கிருபை செய்தார்கள். தேகத்திலுள்ள குஷ்டம் முழுவதும் நீங்கிவிட்டது. நெடுநாளாகப் பைத்தியம் பிடித்துத்திரிந்த கிறிஸ்தவப் பெண் ஒருத்தி ஒருநாள் திடீரெனச் சுவாமிகளுடைய நயன தீட்சைக்கு ஆளானாள். உடனே பைத்தியம் நீங்கிச் சுய உணர்வு பெற்றாள். அன்று தொடக்கம் தினமும் தவறாது வந்து சுவாமிகளுடைய தரிசனம் பெற்றுத் திரும்புவாள்.

சுவாமிகள் சென்னை மவுண்ட்ரோடு அரசாங்க வீட்டில், அன்பர் R. S. தனகோபால் அவர்களுடைய இல்லத்தில் சிறிதுநாள் தங்கி இருந்த காலத்தில் அதாவது 1946வது வருடம் நவம்பர் மாதம் 19ம் திகதி பிற்பகல் ஐந்தரை மணிக்கு விதேகமுத்தி அடைந்தார்கள். அதன் பின் சுவாமிகளின் திருமேனியை தாம்பரம் ராஜ கீழ்ப்பாக்கம் அருகாமையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் 21-11-46 வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு அடியார்கள் அன்பர்கள் புடைசூழச் சமாதி வைத்தார்கள். அதற்கடுத்து இரண்டாம் நாள் 23-11-46 சனிக்கிழமை இரவு ஈசானிய மூலையில் இருந்து ஒரு அகண்டாகார ஒளி வந்து சுவாமியின் சமாதியின் பேரில் பிரகாசித்து அப்படியே சமாதியினுள் ஐக்கியமாகிவிட்டது. அச்சமயம் அங்கிருந்த அடியார்களும் பக்தர்களும் கண்ணாரக்கண்டு பரவசம் அடைந்தார்கள். அவ்விடத்திற்கு அகண்டபரிபூரண சச்சிதானந்த சபா குருக்ஷேத்திரம் என்று பெயர் விளங்கி வருகிறது. ஒவ்வொரு பிரதி மாதமும் முதல் வார குருவாரத்தன்று குருபூசையும் பிரதி வருஷம் கார்த்திகை மாதம் முதல் குருவாரத்தன்று மஹாகுருபூசையும் விமரிசையாக நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் பஞ்சாமிர்தம்

கா. கு. சண்முகம் - காவலி பாளையம்,
சத்தியமங்கலம் வழி-தமிழ்நாடு

திரிகடுகம் என்பது தமிழகத்தின் பழமையான நூல்களுள் ஒன்று. அந்நூலுக்குத் 'திரிகடுகம்' என்ற பெயர் வரக்காரணம் என்ன? உயிர்க்கு உறுதி பயக்கும் மூன்று பொருள்களை ஒவ்வொரு பாட்டிலும் சொல்லப்பட்டிருத்தலால். இரண்டு அடிகளையுடைய திருக்குறளில் சில பாட்டுகளில் மூன்று விஷயங்களையும், சில பாட்டுகளில் நான்கு விஷயங்களையும், இன்னும் சில பாட்டுகளில் ஐந்து அரும் பெரும் விஷயங்களையும் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். இங்கு எடுத்துக்கொண்டவை ஐந்துகள் அடங்கிய குறள்களையே. ஐந்துகள் அடங்கிய குறள்கள் பஞ்சாமிர்தத்தை ஒக்கும். இக்காரணம் பற்றி கட்டுரைக்குத் 'திருக்குறளில் பஞ்சாமிர்தம்' என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல் குறள் அறத்துப்பாலில் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் உள்ளது.

''சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு''

நீத்தார் எனின் முற்றத் துறந்தார் எனப்பொருள். முற்றுத் துறந்தார் எனின் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய தன் மாத்திரைகளின் கூறுபாட்டை அறிதல் வேண்டும். அறிந்து அவற்றை வெல்லுதல் வேண்டும்.

தன் மாத்திரைகள் என்பன தத்துவங்கள் ஆகும். தத்துவங்கள் இருபத்தைந்தெனச் சாங்கிய நூலில் சொல்லப்படுகிறது. அவையாவன பூதங்கள் ஐந்து,பூதங்களுக்கு மூலமாகிய ஐந்து, கருமேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, ஆன்மா, மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இருபத்தைந்து. மேற்கூறிய இருபத்தைந்து தத்துவங்க ளையும் ஆராய்ந்தவன் வசமே உலகம் என்பது இக்குற ளின் கருத்து.

இரண்டாவது பாட்டு இல்வாழ்க்கை என்னும் அதிகா ரத்தில் இருக்கிறது.

**தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

இல்வாழ்வான் கடமை இங்கு சுருக்கமாகச் சொல்லப் படுகிறது. இல்வாழ்வான் தனக்கு விதிக்கப்பட்ட கட மைகளைச் செய்தால்தான் அது இல்லறமாகும். இல்லை யாயின் அவன் வாழ்க்கை அறத்தின் பாற்படாது புறத்த தாகும். பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் ஆகிய ஐவருக்கும் உதவுகிறவனே சிறந்த இல்லறத்தான் என்பது கருத்து. பிறர் நலத்துக்குப் பெரிதும் பாடுபட வேண்டும் என்று இக் குறளால் தெரிகிறது. பிறர் நலத் துக்குப் பின்தான் தன்னலம் என்பதை, 'தான்' என்ற சொல்லை இறுதியில் சொல்லப் பட்டதால் உணர்க.

மூன்றாவது குறள் 'வினை செயல் வகை' என்னும் அதி காரத்ததாகும்.

'பொருள் கருவி காலம் வினை இடனொடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்'

இது சிறப்பாக அமைச்சர்களுக்குச் சொல்லப்பட்டா லும், பொதுவாக எல்லார்க்கும் ஏற்றதாகும். வினை ஆகிய தொழிலைச் செய்யும் போது பொருளும், கருவியும், காலமும், வினையும், இடமுமாகிய ஐந்தையும் ஐயமற எண் ணிச் செய் என்கிறார் வள்ளுவர். (1) பொருள். அழியும் பொருளும், ஆகும் பொருளும். (2) கருவி. தன்சேனையும் மாற்றார் சேனையும் (3) காலம். தனக்காம் காலமும் அவர்க்காம் காலமும். (4) வினை. தான் வல்லவினையும், அவர் வல்லவினையும். (5) இடம். தான் வெல்லுமிடமும், அவர் வெல்லுமிடமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த குறள்:

பிணியின்மை செல்வம் விளையின்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்து.

ஒரு நாட்டுக்கு அழகாய் அணிகலன்களாய் அமைந்தவை ஐந்து (1) நோயின்மை. காலரா போன்ற கொள்ளை நோய்கள் இல்லாதிருத்தல். (2) செல்வம். குடிகளிடம் போதிய வருவாய் இருத்தல். (3) நல்ல விளைபொருள்கள். (4) இன்பம். நாட்டு மக்கள் கவலையும் பயமுமின்றி இருத்தல். (5) ஏகம் எனப்படும் காவல். குடிகள், திருடர் தியோரிடமிருந்து ஆட்சியாளரால் பாதுகாக்கப்படுதல்.

ஐந்தாவது குறள்:

உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

இங்கு நாட்டில் வாழுகின்ற குடிமக்களின் குற்றங்களுள் ஒன்றை, ஒன்றின் தீமையைக் கூறுகிறார். ஒருவன் சூதை விநோதத் தொழிலாக விரும்பினால் அவனுக்கு நல்ல உடை, நல்ல ஊண், செல்வம், மேனிஒளி, கல்வி ஆகிய ஐந்தும் சேராது என்பது கருத்து. சூது போல் வறுமை வருவது வேறு இல்லை என்பார் வள்ளுவர்.

ஒருவர் சூதாட்டத்தாலே அவரை நல்லவர் என்று சொல்லலாம். இருப்பினும் அதுபோதாது. நல்லவருக்கு வேண்டிய குணங்கள் ஐந்தைப் பின்வரும் ஆறுவது குறட் பாடலில் காண்க.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து, சால்பு ஊன்றிய தூண்"

சான்றோருக்கு இன்றியமையாதிருக்கவேண்டிய பண்புகள் ஐந்து. அவை, 1 அன்பு 2 பழிபாவங்களுக்கு நாணுதல் 3 உலகியலுக்கு ஒப்ப நடத்தல் 4 கண்ணோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 உண்மை பேசுதல் ஆகும். மேற்கூறிய ஐந்து குணங்களும் சான்ருண்மைக்குத் தூணுக நிற்பவை. தமிழர்கள் சான்ருண்மைக்குப் பேர்போனவர்கள். அந்நற்பெயரை நாம் இனியும் காப்பாற்றி வரவேண்டும்.

ஏழாவது குறள், காமத்துப்பால் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

கண்ணுல் கண்டும், காதால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் முகர்ந்தும், மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புல இன்பமும் தலைமகள் கண்ணே உள என்பது இதன் பொருள். ஆற்றங்கரையின் அருகில் இருக்கும் வேர்கள் எவ்வாறு ஈரத்தைநாடி வேகமாக வளர்ந்து செல்லுமோ, அதுபோல் என்னுடைய புலன்கள் கரியகண்களையுடைய பெண்கள்மீது செல்கின்றன என்பார் மணிவாசகரும்.

''காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாம்
வேருறுவேனை விடுதி கண்டாய்.''

ஓர் ஆணின் ஐம்புலன்களுக்கும் இன்பத்தைத் தரும் பெண்ணே பின் அவனுடைய வீழ்ச்சிக்கும் காரணம் ஆகிருள் என்பதை மறப்பதற்கில்லை.

## மூலப்பிறவி மார்க்கம்

பரையசைய —பிந்து அசையும்
பிந்து அசைய —குண்டலி அசையும்
குண்டலி அசைய —மூலம் அசையும்
மூலம் அசைய —பிராணன் அசையும்
பிராணன் அசைய —சித்தம் அசையும்
சித்தம் அசைய —மனம் அசையும்
மனம் அசைய —இந்திரியம் அசையும்
இந்திரியம் அசைய —இகத்திற் பிறவி அதிகமாம்.

—சச்சிதானந்தசற்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி ராமதாஸ் அருளுரைகள் (42)

# எல்லாவற்றிலும் இறைவனைக்காண்க.

தமிழ் வடிவம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை

ஸ்ரீராமபிரானுக்கும் இராவணேஸ்வரனுக்கும் கடும் போர் நடந்தபோது, வானர சேனைகள், இராவணனுடைய வீரர்களால், ஒரு கால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற ஸ்ரீ ராமபிரான், இந்த இடுக்கணில் இருந்து வானரங்களைக் காப்பாற்ற எண்ணினார். தமக்கே வாய்ந்த சக்தியினால் இரு அரங்கிலுமுள்ள படைகளைத் தமது சொரூபமாகத் தோற்றும்படி மாற்றி விட்டார்கள்.

வானரங்கள் யாவும் ஒருவரை ஒருவர் தாம்வழிபடும் தெய்வமான ஸ்ரீராமனைக் கண்டு உவகை பூத்து ஒருவரை ஒருவர் தழுவி ஆனந்தக் கூத்தாடினர். இதே போன்று இராவணப் படையினர் ஸ்ரீ ராமனைக் கண்டு ஆவேசங் கொண்டு ஒருவரை ஒருவர் உக்கிரமாகத் தாக்கிக் கொல்லத்தொடங்கி அதிகம் சேதத்துக்குள்ளாக்கிக் கொண்டனர்.

**வானரங்கள் போன்று, எங்கும் இறைவனைக் காணக்கூடிய மனப்பக்குவத்தை வருவித்துக் கொள்! மனதில் பயம் அகன்று விடும். உனது மனதில் இருந்து அன்பு அருவியாகி ஊற்றெடுக்கும். எல்லோரையும் ஒரேமாதிரி நேசிப்பாய்! ஆனந்த சாகரத்துள் மூழ்கித் திளைப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்துவரும் இரத்தினகிரி தேவஸ்தானம்

நா. முத்தையா

வளர்ந்துவரும் சித்த ஆயுர்வேத மத்திய ஆராய்ச்சிக் கவுன்சில் புதுடில்லியில் உள்ளது. இதன்கீழ் சென்னை அரும்பாக்கத்தில் அண்ணு மருத்துவமனைக்குப் பக்கத்தில் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் இயங்கிவருகின்றது. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் இந்தியாவிலும் தமிழகத்திலும் முதல்தடவையாக நடமாடும் இலவச சித்த மருத்துவமனை ஏராளமான பொருட்செலவில், இரத்தினகிரி அருள்திரு பாலமுருகன் திருக்கோயிலை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இரத்தினகிரியைச் சுற்றியுள்ள பன்னிரண்டு கிராமங்களுக்கு இம்மருத்துவமனை சென்று, நோயாளர்களைப் பரீட்சித்து இலவசமாக உயர்ந்த சித்த மருந்துகளான பஸ்பங்கள், செந்தூரங்கள், மாத்திரை, தைலம், லேகியம், போன்ற மருந்துகளை விநியோகித்து வருகின்றது. மேலும் நோயாளர்களுக்கு இலவசமாக சிறுநீர்சோதனை, மலசோதனை, இரத்த சோதனை போன்ற பலவகையான சோதனைகளையும் இந்த மருத்துவமனை செய்துவருகின்றது.

நோய் வராமல் தடுக்கவும், வந்த நோய்களை எளிதில் குணமாக்கிக் கொள்ளவும், வழிவகைகளை கிராமப் பொது மக்களுக்கு மருத்துவ அதிகாரிகள் சொல்லிக் கொடுக்கிறார்கள். சித்த மருத்துவ முறைப்படி பச்சிலை மூலிகைகளைக் கொண்டு அனேக நோய்களை எளிதில் குணமாக்கிக் கொள்ள முடிகின்றது. இம்மாதிரி உயர்ந்த மூலிகைகளை கிராமப் பொதுமக்களுக்குக் காண்பித்து அம்மூலிகைகளை கிராமங்களில் வளர்த்து அதனுல் பயனடையும் முறைகளையும் சென்னை சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலைய மருத்துவர்கள் விளக்கிக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நல்வாழ்வுக்கான துண்டுப்பிரசுரங்கள், படங்கள், படக்காட்சிகள் மூலமாகவும் மக்களுக்குத் தொண்டு செய்யப்படுகின்றது. புற்றுநோய், வயிற்றுப்புண் போன்ற கடுமையான நோயாளர்களை நடமாடும் பேருந்து சென்னைக்குக் கொண்டுவந்து, சென்னையில் எல்லாவித நவீன வசதிகளுடன் கூடிய சித்த மருத்துவ மனையில் இலவசமாக தங்கவைத்து உணவு, மருந்துகளை இலவசமாகக்கொடுத்து நோய்தீர்க்கிறார்கள்.

கோயிலின் முன் பக்கமாக அறுகோணவடிவில் தெப்பக்குளம் ஒன்று அமைக்கப்படஇருக்கின்றது. ஊற்றுமூலம் குளத்தில் நீர் நிரம்புகின்றது. நீர்மட்டம் குறையும் போது பாலாற்றிலிருந்து குழாய் மூலம் நீர்பாய்ச்சப்படும்.

1981ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. அதற்கான ஆயத்தங்கள் இப்பொழுதிருந்தே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மூன்று லட்ச ரூபாய் செலவில் நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்திற்கு தற்போது ஒன்றரைலட்சம் ரூபாய் சேர்த்து கையிலிருப்பதாகவும் மீதி ஒன்றரைலட்சம் ரூபாயும் சித்திரை வருடத்திற்குள் சேர்நது விடும் என்றும் பாலமுருகனடிமையாகிய இரத்தினகிரி சுவாமிகள் மகிழ்வுடன் கூறுகின்றார்கள். இக்கோயிலைப்பற்றி அருணகிரியார் நான்குதிருப்புகழ்ப்பாடல்கள் பாடியுள்ளார். கோயிலின் பெருமைக்குக் காரணம் சுவாமிகள் செய்யும் தவமே. சுவாமிகள் செய்யுந்தவம் பக்தர்களைக் காந்தமெனக் கவர்ந்து இழுக்கிறது. கோயில் வேறு சுவாமிகள் வேறு அல்ல; கோயிலே சுவாமிகள்; சுவாமிகளே கோயில், என்ற அளவிற்குச் சுவாமிகளுடைய பணிகள் கோயிலுடன் இரண்டறக்கலந்துவிட்டன. சுவாமிகள் பூதஉடலுடன் உலாவும் போதே சுவாமிகள் சிலை ஒன்றை முன் புறத்தில் அமைக்கவேண்டியது பத்தர்களுடைய முக்கிய கடமையாகும். எமது நன்றிக்கடனைச் செலுத்தவும், சுவாமிகளுடைய தவப்பணியை எதிர்காலச் சந்ததியினருக்கு நினைவூட்டவும் அச்சிலை பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நடைபெற்றுவரும் அரசாங்கப் பாடசாலைக்கு தேவஸ்தானம் 4 அறைகளைக்கட்டிக் கொடுத்து உதவியுள்ளது. இதற்குமேலாக எதிர்காலத்தில் பாலர் பாடசாலை ஒன்றும், குழந்தைகள் நலவிடுதி ஒன்றும்; பிரசவமருத்துவ மனை ஒன்றும், திருமுறைப்பாடசாலை ஒன்றும் கட்டுதற்கான திட்டங்களைத் தேவஸ்தானம் வகுத்துள்ளது.

பத்து ஆண்டுகளுக்குள் நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் கோயிலுக்குச் சேர்ந்துள்ளன. இத்தனைக்கும் காரணம் பிரார்த்தனையே தவிர வேறு எவ்வித மந்திரதந்திரங்களும் இல்லை என்கிறார் சுவாமிகள். இதயசுத்தியோடுபிறருக்குத்தீங்கு செய்யாத உள்ளத்தோடு ஒருவன் பிரார்த்திப்பானானால் அவன் விரும்புவதை எல்லாம் கலியுக வரதனும் முருகப்பெருமான் அருளுகின்றான் என்று சுவாமிகள் கூறுகின்றார்கள்.

1981ம் ஆண்டு நடைபெறப்போகும் கும்பாபிஷேகத் தினத்திற்கு ஒரு மாதம் முன்னதாகவே வந்து கிராமந்தோறும் கோயிலை மத்தியாக வைத்துச் சமயப்பிரச்சாரம் செய்யுமாறு சுவாமிகள் அழைத்துள்ளார்கள். சமயப்பிரசாரத்திற்குரிய வாகனம், படம் காட்டும் கருவி, திருமுறைப் பாடல்கள் அமைந்த ஒலிப்பதிவு நாடாக்கள், விபூதி, சுவாமிப்படங்கள் ஆதியன இப்பொழுதிருந்தே சுவாமிகள் ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்.

கோயில்களை நடாத்தும் அறங்காவலர்கள் இரத்தினகிரிக்கு ஒருமுறை சென்று தரிசித்தால், அறங்காவலர்கள் கற்றுக்கொள்ளவேண்டியன அதிகம் உண்டு. கோயில் சமூகத்திற்காக இருக்கிறது; கோயில் சமூகத்திற்கு என்னென்ன செய்யலாம் என்பவற்றை அங்கு செல்பவர்கள் காணலாம். உலகத்திற்கே ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றது இரத்தினகிரி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமண்டலத்தின் தொன்மையும் மேன்மையும்

தொண்டை மண்டல ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள்

பண்டைத் தமிழ் நாடு சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என ஐந்து மண்டலங்களாக இருந்த செய்தியைத் திருமந்திரம், தண்டியலங்காரம் முதலிய நூல்களால் காணலாம். தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. இவைகளுள் ஒன்று எயிற் கோட்டம்: அக்கோட்டத்தின் தலைநகராக விளங்கியது காஞ்சி. எயில் என்ற சொல்லுக்குக் கோட்டை என்றும் பொருள்

பண்டை வரலாறு:- காடாக இருந்த இப் பகுதியைக் கரிகாற் சோழன் திருத்தி நாடாக்கி நற்குடி நாற்பத்தெண்ணுயிரத்தைக் குடியேற்றியதாக 14-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவம் பேசுகிருர். இதே செய்தியை 12-ஆம் நூற்ருண்டில் சோழப் பேரரசின் முதல் அமைச்சராக இருந்த தெய்வச் சேக்கிழார் பெருமான் இமையவரையின் மேல் தன் புலிக் கொடியினை நாட்டச் சென்ற கரிகாற் சோழன் ஒரு வேடன் மூலம் இதன் வளத்தை அறிந்து, இவ்விடத்தில் நான்கு காதங்கள் சதுரத்திற்குக் காஞ்சி மாநகரை அமைத்து, குன்றன்ன மதில் அமைத்து இங்குக் குடியமர்த்திஞன் என்று பேசுகிருர். இந்நாள் வரலாற்றுப் பேராசிரியர்கள், இச் செய்தி வரலாற்று ஆதாரம் பெற்றது என்றும், சோழர் காலத்திய செப்பேடுகளிலும், அண்மையில் திருத்தணியில் கிடைத்த பராந்தகன் செப்பேட்டிலும் இவ்வரலாறு பேசப்படுகிறது என்றும் கூறியிருப்பதைக் காணலாம். இதே வரலாற்றைப் பட்டினப்பாலை என்ற சங்க இலக்கியத்தில் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் கீழ்க் கண்டவாறு பேசியிருப்பதைக் காணலாம்:

காடு கொன்று நாடாக்கி
குளந்தொட்டு வளம் பெருக்கி
வாயிலொடு புழைய மைத்துக்
கோயிலொடு குடிநி ற்கிருன்

இன்னும் திருவேகம்பர் திருக்கோவிலில் கரிகாற் பெருவளத்தான் மிக்க கம்பீரமான தோற்றத்துடன் இருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்து மாமல்லபுரம் தொண்டை நாட்டின் சிறந்த துறைமுக நகரமாக இருந்தது — செல்வ வளம் மிக்கதாக இருந்தது என்பதையெல்லாம் பெரும்பாணாற்றுப்படையிற் காணலாம். "முதற் கரிகால் வளவன் (கி. மு. முதல் நூற்றாண்டு) இதை நாடாக்கிச் சோழ நாட்டின் பகுதியாக்கினன். சோழர் குடியில் வந்த இளவரசன் இதன் தலைவராயிருந்து ஆண்டவன். கி.பி. 300 முதல் கி. பி. 900 வரை பல்லவர் ஆட்சியின் கீழ் இருந்தது. கி. பி. 900 முதல் கி. பி. 1300 வரை மீண்டும் சோழப் பேரரசர்கள் மீண்டும் இப்பகுதியைத் தம் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தனர். கோதாவரி ஆறு வரையும் அதற்கப்பாலும் பரந்தமைந்த அவர்கள் ஆட்சியில் வடபகுதிக்கு இது துணைத்தலைநகராய் இருந்தது" என்றும் இன்றைய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மற்றோர் வரலாற்றுச் செய்தியும் இங்கு நினைவு கூரத்தக்கது. முதற் குலோத்துங்க சோழன் பாலாற்றங்கரை வழியே வேட்டையாடிக்கொண்டே போந்து காஞ்சியில் தன் அரண்மனையில் தங்கினான் எனவும், விடியற்காலத்தில் திருவோலக்கத்தில் வீற்றிருந்து, சிற்றரசர்களால் திறையளக்கப் பெற்ற நேரத்தில் கலிங்க வேந்தன் அனந்தபதுமன் ஈராண்டு கப்பஞ் செலுத்தாததை அறிந்து மிக்க கோபங்கொள்ள சேனைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் அரசனை அமைதிப் படுத்தி, தான் சென்று கலிங்கத்தை வென்று அனந்தபதுமனைச் சிறைப்பிடித்து வந்தான் என கலிங்கத்துப்பரணி பேசுகிறது. அவன் தண்டு எடுத்துச் சென்றபோது முதலில் கடந்து சென்றது பாலாறு என்பதையும் காணலாம். ஆகவே, இற்றைக்கு 800 ஆண்டுகட்கு முன்னர்ப் பாலாறு காஞ்சிக்கு வடபால் ஓடிய செய்தி அறியலாகும். இன்னும் காஞ்சிபுரத்தின் வடபகுதி மணற்பாங்காய் இருப்பதையும், இது பழைய பாலாற்று வழி என இப்பகுதி மக்களால் பேசப்படுவதையும் காணலாம்.

உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக மதிக்கத் தக்க மாட்சிமை உடையது காஞ்சி. கி. பி. 640இல் இயூன் சுவாங் என்னும் சீன யாத்திரீகர் இங்கு வந்து இதன் சிறப்புகளை வியந்து பேசியுள்ளார். நகர அமைப்பு (Town Planning) முறையில் காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது என்று பேராசிரியர் கெட் துரைமகனார் (Prof: Gedges) இதனைப் புகழ்ந்து பாராட்டி இருப்பதாகக் காணப்படுகிறது. ஆக தொண்டை மண்டலத்திற்கே சிறந்த தலைநகராய் இருந்த காஞ்சி மாநகர் 18-ம் நூற்றாண்டுவரை சீரும் சிறப்புமாகத் திகழ்ந்து ஆங்கிலேயர் வருகையால் சென்னை நகர் சிறப்புப் பெற, இந்நகரின் சிறப்பு மங்கத் தொடங்கியது என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயத் தொடர்பு: இன்றுவரை உலகில் காணப்பெறுகின்ற உருவ வழிபாட்டில் சிவலிங்க வழிபாடு சரித்திர காலத்திற்கும் மிகப் பழமையான ஒன்று என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் முடிவிலிருந்து காண்கின்ருேம். இச் சிவலிங்க வழிபாடு முதல் முதலாக இந்நிலவுலகில் எங்குத் தோன்றியது? இவ்வழிபாட்டைச் செய்தவர் யார்? வழிபாட்டுமுறையை இவருக்குக் கற்பித்தவர் யார்? இவ்வழிபாட்டுமுறையை மேற்கொள்வதால் இன்று நாம் பெறும் பயன் என்ன? என்பவைகளை எல்லாம் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிலே தெய்வச் சேக்கிழார் பெருமான் பேசுகிருர்.

இறைவனிடத்தில் ஆகமப் பொருளைக் கேட்ட அம்மை உயிர்கள் மேல் வைத்த கருணையினுல் இந்நில உலகில் நாம் வழிபாடு இயற்ற வேண்ட, அதற்கு இறைவர், ''தெற்குத் திசையானது செய்த மிக தவப்பயனுல், யாவரும் தன்னிடம் வந்து அடையத் தக்கதும், என்றும் அழியா நிலை பெற்றிருப்பதும் காஞ்சிமா நகராகும். அதனுள் மாமரத்தினடியில் நாம் விரும்பி எழுந்தருளியிருக்கும் இருக்கையில் சென்றணைந்து நிலைபெற்ற பூசையினை மகிழ்ந்து செய்வாயாக'' என்று ஆணையிட்டருள, எம்பெருமாட்டியும் காஞ்சிக்கு எழுந்தருளி பூசை செய்யும் போது ஏகம்பர் திருவிளையாட்டாக ''ஓதப் பெருக்குடைய ஏழு கடல்களும் ஒன்ருகப் பொங்கி வானமும் உள்ளடக்குமாறு மேலே உயர்ந்து செல்வது போலக்'' கம்பையாற்றில் வெள்ளம் பெருகுமாறு திருவுள்ளம் செய்தருளினர். அப் பெருவெள்ளமானது தாம் வழிபடும் சிவலிங்கத் திருமேனியின் மேல் வந்து அடரும் எனப் பயந்த அம்மை, தமது திருக்கரத்தால் வெள்ளம் மேல் வராதபடி தடுத்தும், அது மேற்கொண்டுவர, வெருவியோடித் தழுவ இறைவர் வெளிப்பட்டார் என்று பேசுகிருர். இதே செய்தியை 9-ஆம் நூற்ருண்டில் திருவேகம்பத்தை வழிபட வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்:

**''எள்கலின்றியிமையவர்கோனை ஈசனை வழிபாடுசெய்வான்போல், உள்ளத் துள்கி உகந்துமை நங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு, வெள்ளங் காட்டி**
**வெருட்டிட வஞ்சி வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட, கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண்ணடியேன் பெற்ற வாறே''**

அம்மையார் நடுங்கி இறைவரைத் தழுவிக்கொண்ட காரணத்தால் கோயில் ஏகம்பம் எனப் பெயர் பெற்றது (கம்பம் - நடுக்கம்). இறைவர் ஏகம்பர் எனப் பெயர் பெற்ருர். திருமுறைகள் அனைத்திலும் ஏகம்பம் என்றே வருவதால், ஏகம்பம் என்பதே ஏகாம்பரம் என ஆக்கப்பட்டது எனத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவர் வெளிப்பட்ட நிலையைச் சேக்கிழார் பெருமான் "வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில் வந்து தோன்றினர் மலை மகள் காண" என்று குறிப்பிடுகிறார். மாவின் மூலத்தில் தோன்றியதால் இவ்-விறைவர்க்கு மாமூலர் என்ற பெயரும் உண்டு என்று தெரிகிறது. மாமூலர் என்ற பெயரோடு சங்க காலத்திலேயே ஒரு புலவர் இருந்திருக்கிறார். இவரது பாடல்களை புறநானூறு, அகநானூறு ஆகிய இரண்டிலும் காணலாம். இவர் வரலாறு பாடுவதில் வல்லவர் என்பதும் தெரிகிறது. "மாவடியான்" என்று இன்றும் பெயர் விளங்குவதைக் காண்கிறோம். ஆக, மாமூலர் என்பது மிகப்பழமையான பெயர் என்பது வெளிப்படை.

இத் தலத்து அம்மையின் பெயர் காமாட்சி. காமம் - அழகு அழகிய கண்ணையுடையவர் என்பது பொருள். "காமக்கன்னி" என்ற பெயரே பண்டை நாளில் வழங்கி வந்திருக்கிறது என்று தெரிகிறது. ஏனெனில் காமக்கன்னியார் என்ற பெயரோடு சங்க காலப் பெண்பாற் புலவர் ஒருவர் இருந்ததாகக் காண்கிறோம். வெறிபாட்டுப் பாடியதால் இவர் வெறிபாடிய காமக்கன்னியர் என்றும் தெரிகிறது. ஆகக் காமக்கன்னி என்ற பெயரே தொன்மைப்பெயர் என்பதும் வெளிப்படை. (அங்கயற்கண்ணி - மீனாட்சி, நீள்நெடுங்கண்ணி - விசாலாட்சி) அங்கயற்கண்ணி என்றே திருமுறைகளில் பயிலப்படுகின்றது.

"கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்" என்றும், "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சி" என்றும் திருமுறை ஆசிரியர்கள் இதனைப் போற்றியுள்ளனர். இத் தலம் சைவ சமயக் குரவர் நால்வர்களாலும் பாடப் பெற்றது; மற்றும் ஐந்து திருமுறை ஆசிரியர்கள் பாடலும் இதற்குண்டு. திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனார், ஐயடிகள் காடவர் கோன் ஆகிய மூன்று நாயன்மார்கள் அருள்பெற்ற சிறப்பும் உடையது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இடக்கண் பெற்ற தலமும் இதுவே. முத்திதரும் தலம் ஏழனுள் முதன்மையானது என்றும் இது போற்றப் பெறுவது. நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் முதற்பொருள் ஐந்தால் பெருமை பெறுவன கச்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, தில்லை என்பன. இவற்றில் முன்னின்றிலங்குவது காஞ்சி. இங்குள்ள தலங்களுள் 108 சிவாலயங்களும், 18 திருமால் தலங்களும் சிறப்புப் பெற்றவையாகும். காஞ்சி நகரின் கிழக்கெல்லையில் வரதராசப் பெருமாளும், மேற்கெல்லையில் ஏகாம்பர நாதரும் நடுவே காமாட்சியம்மையும் கோயில் கொண்டிருக்கும் விதம் அன்னையின் திருமணக் கோலத்தை அகக்கண்முன் நிறுத்துவதாகும். திருவேகம்பம், குமரகோட்டம், காமகோட்டம் ஆகிய இவை அமைந்திருக்கும் பாங்கு சத்து - சித்து - ஆனந்தம் என்ற முழுமுதற் பெருமானின் அருள்வடிவத்தை நினைவுறுத்துவதாகும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா?

மாத்தனே — அருணேசர்

முன் தொடர்ச்சி

## மாமிசம் மலத்தினுல் ஆனது

மீன், கோழி, பன்றி முதலியவற்றின் இறைச்சியை மகிழ்ச்சியுடன் உண்பவரே! உம்மிடமிருந்து வெளிப்படும் மல மூத்திரங்கள், நீர் காரியுமிழும் கோழை, சளி, அழுக்கு, சீழ், வாந்தி பண்ணிய பதார்த்தங்கள் முத லானவற்றை நீர் திரும்பத் தொட்டாலும் பார்த்தா லும் எவ்வளவு அருவருக்கின்றீர்?

அப்படிப்பட்ட அசங்கிதங்களையும், புழுக்கள் முத லானவற்றையும் உணவாகக்கொண்டு வாழ்கின்ற மீன் நண்டு, தவளை, கோழி, பன்றி முதலிய உயிர்வர்க்கங் களும் அசங்கிதமுள்ளவைகள் தானே? அவைகளின் உட லெல்லாம் அசங்கிதந்தானே?

பன்றியைப் பாருங்கள்; அதன் உடல் அத்தனையும் மல உருவந்தானே! உயிர்களிலெல்லாம் தாழ்ந்த பருவத்தினையுடையதும் அப்பன்றிதானே! இதனை உம்மில் யாரே அறியாதவர்கள்! ஒரு வேளை அறியாதிருந்தாலும் இப்போதாவது யோசித்துப் பாரும்.

''அசுத்தமா மலத்தையேதின், றவற்றினு லுடலந்தாங்கும்
அசுத்தமாம் பன்றியாதி யருந்திமா நரகத்தாழும்
அசுத்தருஞ் சுத்தர் போல அருவருப் புடையராகி
அசுத்தமா நிலத்திற்கீரை யாதி தீதென்ப தென்னே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்மினு முயர்ந்தோர் கீழோர்
தமதிலத் தறலுண்டாரேல்
அம்மவங் கவரும் கீழென்
றவர்மனைப் புனலு முண்ணு
விம்மனிதர் கடாஞ் சிச்சி
யீனர்தம் மலத்தையுண்டு
விம்முடற் பன்றியாதி
விரும்பியுண்டுவப்ப தென்னு?"

"பன்றியு நாற்காலுள்ள பல்பெருஞ் சாதிக்கெல்லாம்
ஒன்றிய கடையதன்றே யுளத்திடை யோருங்காலே"
"கூறுநாய் கழுதை பன்றி
கோழியும் மலத்தைத் தின்னும்"
என்ற பெரியோர் மொழிகளையும் சிந்தித்துணர்க.

குடல் இறைச்சியை வறுத்துச் சாப்பிட்டால் மிகவும் ருசியாய் இருக்குமெனக் கூறிக்கொண்டு குடல்களிலுள்ள மலமாகிய சாணியைப் பீய்ச்சியெறிந்துவிட்டு அவற்றை நீரிலிட்டு அலசியெடுத்து வறுத்துச் சாப்பிடுவது எவ்வளவு இழிவான செய்கை!

இதனைவிட அக்குடல்களிலுள்ள மலத்தையே தின்னலாமே? குடலை மாத்திரம் ஏன் தின்ன வேண்டும்? குடலைச் சாப்பிடும்போது அதிலுள்ள மலமும் சிறிதளவாவது அதனுடன் கலந்து உள்ளே செல்லாமலா இருக்கும்?

குடலை நன்றாய்க் கழுவியபின்பே சாப்பிடுகிறோமாதலால் அதிலிருந்த மலம் வயிற்றுக்குள் எப்படி செல்லும் என்றெண்ணிக்கொண்டு உண்கிறார்கள் போலும்! அவர்கள் அப்படி நினைத்துக் கொண்டாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பன்றி துன் மலமுண்டாலென்
பரந்துறு துடலமெங்கும்
என்றிருந்தனேயோ பேதா
யினைத்தது பருக்குமாறே
நன்றியு நோயருணல் அபத்திய
மடையக் கண்டு
முன்றனு ளுணராய் நாளு
முண்டனை மலமீதுண்மை''

என்றபடி, அவர்கள் மலத்தைச் சிறிது சிறிதாக உட்கொள்ளுவது உண்மையேயாகும்.

## மாமிசமென்பது செத்த விலங்குகளின் பிணமே!

மனிதன் இறந்தவுடனே அவனுடைய உடலைப் பிணம் என்கிறோம். அது போலவே விலங்கினங்கள் செத்த உடனும் அவைகளின் உடல் பிணமாகிவிடுகின்றன. மானிட பிணத்தைப் போலவே அவ்விலங்குகளின் பிணங்களும் சீக்கிரம் கெட்டு அழுகித் துர்நாற்றமெடுத்து அசுத்தமாகின்றன. இப்படி கெட்டவுடன்தான் அப்பிணங்களில் ''யூரிக் ஆஸிட்'' என்ற நச்சுத்தன்மை அதிகம் ஏற்படுகிறது.

இதனுல் மாமிசமானது உணவாகப் பக்குவப் படுவதற்கு முன்பே அழுகி அசுத்தமாகிவிடுகிற தென்பதை உணரலாம். ஆனுல் மரக்கறி பதார்த்தங்கள் இப்படி சீக்கிரத்தில் கெடுவதில்லை. அவை சில நாட்கள்வரை அழுகிப் போகாமலும் துர்நாற்றமெடுக்காமலும் பசுமை குன்றுமலும் இருக்கின்றன.

மேற்கூறியபடி, விலங்குகள் செத்துப் பிணமாய்க் கிடக்கும்போது அவைகளின் உடல் அழுகி நாற்றமெடுப்பதால் அந்த மாமிசம் எவ்வளவு கேவலமானதென்பதை உணருங்கள். இதையறிந்தே பிண நாற்றம் வீசியவுடன் மனிதர்கள் சகிக்க முடியவில்லையே என மூக்கை இறுக்கிப் பிடித்துக் கொள்ளுகிருர்கள்; காரிக்காரி உமிழ்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் வீட்டில் தமது சொந்த தாய் தந்தை அல்லது சகோதரர் யாராவது இறந்த போதிலும் இரண்டொரு நாள் வைத்திருக்க மறுத்து விடுகிறார்கள். பிணமென்று இழிவாய்க் கூறுகிறார்கள். பிணமிருக்கச் சாப்பிடக்கூடாது எனத் துரிதப்பட்டு அதை அகற்றுகிறார்கள். பத்து நாள் தீட்டு உண்டெனக் கூறிக்கொள்கிறார்கள். பின்னர் சாந்திக்காக வீடெல்லாம் சுண்ணும்பு பூசி, மண்பாண்டங்களையெல்லாம் வீட்டைவிட்டு அப்புறப்படுத்தி, ஆற்றில் முழுகி நீராடி, பஞ்ச கௌவியம் அருந்தி இப்படிப் பல வித சடங்குகளெல்லாம் செய்தபிறகு, வீடெங்கும் நறும் புகை முதலிய தூப தீபங்கள் போட்டு, அதன் பின்னர் சமையல் செய்யத் தொடங்குகிறார்கள்.

இதனோடு ஓராண்டு காலம் வரையில் தல யாத்திரை போகக்கூடாது; வீட்டில் சுபகாரியங்கள் ஒன்றும் செய்யக்கூடாது. இன்னும் பல பல நிபந்தனைகளும் உண்டு.

இறந்த அந்த பிணத்தை ஊருக்கு வெளிப்புறத்திலுள்ள சுடு காட்டில் கொண்டுபோய்ச் சுட்டுவிடுகிறார்கள். அந்தப் பிரேதம் மயானம் செல்லும் வரை அந்த வீதியில் உள்ளவர்கள் உணவருந்துவதில்லை. அருகிலுள்ள கோயில்களில் பூசை நடத்துவதில்லை.

மனிதர் இறந்தால் இப்படியெல்லாம் பலபல பிராயச் சித்தங்களைச் செய்து கொண்டு பிணத்தால் வந்த அசங்கிதத் தன்மையை—தீட்டை நீக்கிக் கொள்கிறார்கள். இதனோடு தாங்கள் உண்ணும் சோற்றிலோ, நெய், பால் தயிர் முதலியவற்றிலோ ஈ எறும்பு பாச்சை முதலிய பூச்சிகள் செத்துக் கிடக்கக் கண்டுவிட்டால் அதன்பிறகு ஒரு பிடி சோறுகூடச் சாப்பிட மறுத்துவிடுகிறார்கள்.

இவ்வாறு பிணங் கிடக்கச் சாப்பிடமாட்டோம் என்னும் மனிதர்கள், ஆடு கோழி பன்றி முதலிய விலங்கினங்கள் செத்துப் பிணமாகியதை மாத்திரம் கண்டுவிட்டாலோ? அப்பா! அதனை என்னென்று சொல்வது! அப்பிணத்தைக் கொண்டு வந்து புசிப்பதற்குப் பேயாக வல்லவோ பறந்தோடுகிறார்கள்!

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்
# இந்து சமயம்

செஞ்சொற் கவிமணி புலவர் மா. வெங்கடேசன் எம். ஏ.,
காஞ்சிபுரம் – தமிழ்நாடு

சென்ற இதழ் தொடர்ச்சி

இப்பாடற் பகுதியால் மரவுரி உடுத்தல் முதலிய தவ வேடத்தாலும் உண்ணுமை முதலிய விரதங்களாலும் காமம், வெகுளி முதலிய குற்றங்கள் நீங்கிய நிறை ஞானத்தாலும் முனிவர்கள் தலை சிறந்தவர்கள் என்பதைத் தெளிவாக அறிவதுடன் அக்காலத்தில் இத்தகைய முனிவர் பலர் வாழ்ந்து நாட்டவர்க்கு இந்து மத தர்மங்களை எடுத்தோதி வந்துள்ளனர் என்பதையும் நன்கு உணரலாம்.

## தானம் அளித்தல்

அந்தணர் முதலிய தக்கார்க்கு ஒரு பொருளைத் தானமாக அளிக்கும் போது, ஏற்பவர் கையில் எள்ளுடன் நீரைத் தாரையாக வார்த்து அர்ப்பணம் செய்வர்.

இவ்வழக்கத்தினை அக்கால மக்கள் சிறந்ததாகப் போற்றி வந்தனர் என்பதற்கு 'முல்லைப்பாட்டு' சான்று தருகின்றது.

கடலின் கண் நீரைப் பருகி மேகம் மேலே எழுகின்றது. இக்காட்சியைக் கண்ட புலவர்க்குத் திருமால் மாவலியினிடம் மூன்று அடி நிலம் பெற்றுப் பேருருக்கொண்டு மேலெழுந்த காட்சி நினைவுக்கு வருகின்றது. அவன் அந்த நிலத்தை அவருக்கு அளித்து விட்டதற்கு அடையாளமாக அவரது கையில் நீரை விட்டுத் தானம் செய்தான். அந்நீரைத் தன் கையில் ஏற்றவுடனே திருமால் விஸ்வரூபம் கொண்டு மேலெழுந்தார். அக்காட்சியையே புலவர் கடல் நீரைப் பருகி மேலெழும் மேகத்திற்கு ஒப்பாகக் கூறினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கொடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி''
(முல்லைப்பாட்டு அடிகள் (1–5)

இதனால் நீரை வார்த்துத் தானம் அளிக்கும் இவ் வழக்கத்தினைப் பண்டைக்கால மக்கள் மறவாது கடைப் பிடித்து வந்துள்ளனர் என்பதை அறியலாம். ஆகவே இந்து சமயக் கொள்கையே அக்கால மக்கட் சமுதாயத் தில் மேலோங்கி நின்றமை கூறுமலே விளங்கும்.

## தீர்த்தங்களும் பாவ விமோசனமும்:—

புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கினால் கொடிய பாவங் கழியும் என்பது இந்து சமயத்தின் கொள்கைகளுள் ஒன் ருகும். அத்தகைய தீர்த்தங்களும் ஒன்றற்கொன்று உயர் வுடையனவாகப் போற்றப்படும். குளத்துத் தீர்த்தத்தி னும் நதி தீர்த்தம் சிறந்ததாகவும் அந்நதித் தீர்த்தத்தினும் கடல் தீர்த்தம் மிக்க சிறப்புடையதாகவும் மதிக்கப் படும். இச் சிறப்புணர்ந்து அக்கால மக்கள் தங்கள் பாவம் நீங்கக் கடலில் மூழ்கிய செய்தியைப் 'பட்டினப் பாலை' என்னும் நூல்,

''தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
மலியோதத்து ஒலிக்கூடல்
தீது நீங்கக் கடலாடியும்
மாசு போகப் புனல் படிந்தும்
... ... ... ... ...
அகலாக் காதலோடு பகல் விளையாடி''
(பட்டினப்பாலை அடி, (97–103)

என்று எடுத்துரைக்கின்றது. கடலில் மூழ்குவது பாவந் தொலைதற்கேயன்றி உடல் அழுக்கு நீங்குவதற்கு அன்று. இங்ஙனம் தீது நீங்குதற்கே கடலாடிய அவர்கள் தங்கள் உடல் தூய்மையுறுதற்காகக் காவிரி நீரில் மூழ்கியதை ''மாசு போகப் புனல் படிந்தும்'' என்பதால் அறிய லாம். ஆகவே பண்டைக் காலத்தவர் கடலாடுதலின் பயன் அறிந்து அதில் மூழ்கி இன்புற்றமை தெளிவாகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத நெறி

திருஞான சம்பந்தரது தெய்வீக வரலாற்றுள் அவர் தம் சிறப்புக்களாகப் பல கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக உயர்ந்தது, அவர் புனிதவாய் மலர்ந்து அழுத பெருஞ் சிறப்பு! அச்சிறப்பினை விவரிக்க முற்பட்ட சேக்கிழார் சுவாமிகள்

"வேதநெறி தழைத் தோங்க
மிகு சைவத் துறை விளங்கப்
பூதபரம் பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத"

என்று விவரித்துள்ளார். அப்பாடலில் அவர் வேதநெறி என்று குறித்தது இந்து சமயத்தையே. சைவம் அதனுள் பெருந்துறையாக விளங்குவது உயிர்கள் நற்கதி அடைதற்குரிய மார்க்கத்தை வேதத்துள் கூறியவாறு விளக்கமாக எடுத்துரைக்கும் சமயமாதலால் இது 'வேதநெறி' என்றும் வேத மார்க்கம் என்றும் வைதீக சமயம் என்றும் புகழப்படுகின்றது. ஆகவே இச்சமயத்திற்குப் பிரமாணமாக இருப்பது வேதமேயாகும். அத்தகைய வேதத்தைப் பற்றிய பல செய்திகள் இந்நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### வேதம்: எழுதாக் கிளவி:-

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய 'குறுந்தொகை' என்னும் நூலில், தலைமகன் கூற்றாக வரும் ஒரு செய்யுள் 'வேதம்' எழுதப்படாத தன்மையுடையது' என்று விளம்புகின்றது. அது

"படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? (குறுந் 156)

என வருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவியைப் பிரிந்து வாடும் ஒரு தலைமகனது பரிதாப நிலைகண்டு ஒழுக்கத்தால் மிக்க அவன்து அந்தணத் தோழன் அறிவுரை கூறி ஆற்ற முயல்கின்றான். அதனை ஏற்காமல் அத்தலைமகன் அவனை நோக்கிக் கூறுவதாக அமைந்ததே இப்பாடல்.

இதில், 'அந்தணர்களால் ஓதப்படும் வேதமானது எழுதப்படாத சிறப்புடையது' என்று வேதத்தின் தன்மையைக் குறிப்பிட்டிருத்தலைக் காணலாம்.

## நான்கு வேதங்கள்:-

இத்தகைய வேதம் ரிக்வேதம், யஜுர்வேதம், அதர்வணவேதம், சாமவேதம் என நான்கு வகைப்படும் என்பதைப் பல பாடல்கள் தெரிவிக்கின்றன.

முருகப் பெருமான் வள்ளியம்மையை மணந்த சிறப்பினை எடுத்துரைக்க முற்படும் ஆசிரியர் ஒருவர், அதனைக் கேட்கத் தக்க அந்தணப் பெருமக்களைப் பின்வருமாறு அழைத்துக் கூறுகின்றார்.

''நான் மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின்! சிறந்து''
(பரிபாடல் 9 அடி 12, 13)

இவ்வடிகள் வேதங்கள் நான்கு வகைப்படும் என்பதைத் தெளிவாக அறிவதுடன் அவற்றை விரித்துரைக்கத்தக்கோர் அந்தணரே என்பதையும் அறியலாம். முப்புராதிகளை அழிக்க முற்பட்ட முக்கட் பெருமான், எழுந்தருளிய கோலத்தை விவரிக்கும் பாடல்கள் இந்நூல்களில் பல உள்ளன. அவற்றுள் பின்வரும் பரிபாடல் பாட்டொன்று அதனைச் சுவையாக எடுத்துரைக்கின்றது.

''ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ
வேத மாபூண் வையத் தேர் ஊர்ந்து
நாகம் நாணு, மலைவில் லாக
மூவகை ஆர்எயில் ஓர் அழல் அம்பின்முளிய
மாதிரம் அழல எய்து, அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்
(பரிபாடல் 5 அடி 22 - 27)

(ஆதி அந்தணன் - நான்முகன்; பைங்கண் பார்ப்பான் - சிவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடற் பகுதியில், "இமயமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு நான் முகனால் செலுத்தப்படும் வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட பூமியாகிய தேரில் சிவபெருமான் ஏறிச் சென்றார்" என்று கூறப்படும் செய்தியில் 'வேதங்கள் நான்கு' என்னும் உண்மை குறிப்பாக உணர்த்தப்படு வதனைக் காணலாம்.

## வேதம் நித்தியம்

மேலும் இவ்வேதங்கள் ஏனைய உலகப்பொருட்களை போன்று அநித்தியத் தன்மையுடையன அல்ல; என்றும் நித்தியமாக விளங்குபவை. இவ்வுண்மையையும் இந்நூல் கள் இனிதாக எடுத்துரைக்கின்றன.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதனை, என்றும் 'நிலைத்து' வாழுமாறு வாழ்த்துக்கூறும் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர்,

"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேதநெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுது சேண்விளங்கி
நடுக்கின்றி நிலியரோ! அத்தை
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே"

என்று கூறியுள்ளார். (புறம் 2)

இதில் "நா அல்வேத நெறி திரியினும்" என்பதில் வந்துள்ள 'உம்'மை அது திரியாது நித்தியமாக உள்ளமை யை உணர்த்துகிறது. ஆகவே வேதங்கள் என்றும் நிலையாக உள்ளவை என்பதை அறியலாம்.

மற்றும் வேதங்களைப் பற்றி பல இடங்களில் குறிப்பிடும் பரிபாடல் என்னும் நூல் அவற்றின் நித்திய தன்மையை யும் குறிப்பிடுகின்றது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவ வழியில்...

# நிலையாமை

நாக-பத்மநாதன்

நிலையானது ஒன்றேயாம்.

அந்தப் பொருளை மறந்து இருளைப் பிடிப்பதா?

மேடையில் கூத்து நடைபெறுகிறது. அதைப் பார்க்கப் பெருந்திரளானோர் வந்து குவிகின்றனர். கூத்து முடிந்ததும் அவர்கள் கலைந்திடுவர். செல்வமும் அதையடுத்த இன்ப துன்பமும் வந்து போவது அவ்விதமே!

எனவே, பொழுது பொருந்தும் போது தாழ்த்தாது அறம் செய்வீர்.

நல்லதைப் பிற்போடாதீர். வாழ்வு நிலையானதல்லவே!

அதோ, மரத்தை அரிந்திடும் வாள்போல நாள் என்பதும் ஆயுளை முடித்து வருகின்றது.

நேற்றிருந்தவன் இன்றில்லாது மறைந்தனன். அதனைப் பொருட்படுத்தாது உலகம் நடைபெறுகிறது.

தான் உள்ளிருந்த முட்டையைப் பிளந்து புள் பறந்து போகிறது. அதுபோல, உடலே, உன்னை விட்டு ஒரு நாள் உயிர் விரைந்து செல்வதும் நிச்சயம்!

இறப்பும் பிறப்பும் எதனை ஒக்கும்? அனுபவத்திற் சிறு பொழுது தூங்கி விழிப்பதை ஒக்கும்!

வாழ்வைப் புரியாத உணர்வில்—அறியாத நிலையில்—ஆயிரம் கோடி நினைவை நெஞ்சகத்தே வளர்த்துச் சுமக்கின்றனர்! அந்தோ!

சொந்த வீட்டிற்கு உரியவன் அங்கிருந்து வந்தான். அலுவலுக்காக இங்கு சில இடம் ஒதுங்கினன். மீண்டும் தன் வீட்டை அடைந்தான். உயிரும் அதுபோல வந்தது; தங்கி நின்று பின்னர் தன்னிடம் சென்றது, அது அங்கு அமைதியுற்றது!

நிலையான இடம் அது ஒன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகத்துடன் பதினைந்து நாட்கள்

புலவர் விசூர்மாணிக்கம்
மானும்பதி-தமிழ்நாடு

சென்ற இதழ் தொடர்ச்சி

ஸ்ரீலங்கா ஆத்மஜோதி ஆசிரியர் சிவத்திரு. நா. முத்தையா அவர்களின் உருவத்தைக் கண்டதும்,

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயில் வாசலிலே
அடியாரும் வானவரும் அரம்பையரும் புடைசூழ
படியாய்க் கிடந்துன் பவளவாய்க் காண்பேனே'

என்ற ஆழ்வார் பாடலில் நெடியானே என்னும் செஞ்சொல் என் நினைவில் எழுந்தது. ஆம். அந்த அளவுக்கு அடிகளார் நெடியோனாக நீண்டு வளர்ந்திருந்தார்.

நல்ல உயரம். எடுப்பான தோற்றம். நீறு பூத்த நெற்றி. காந்த ஒளிவீசும் கண்கள், நல்லனவே பேசும் நா. தீங்கறியாச் சிந்தை. சிவத்தொண்டே ஆற்றத் துடிக்கும் சீரிய நோக்கு. சிறிது நேரத்தையும் வீணாக்காமல் செயல்புரியும் நேர்த்தி. பற்றற்ற உள்ளம். பக்திப் பரவசமூட்டும் பேச்சு. கம்பீர நடை. கருணை பொழியும் பார்வை. தாயினும் மிக்க அன்பு. ஆயுள் அறுபதைக் கடந்தும் அயராத உழைப்பு. ஆடம்பரம் இல்லாத எளிய உடை. ஆம்... இத்தனைக்கும் மொத்த நிலைக்களனாக விளங்கும் முத்தையா அவர்களைக் கண்டு மாலையணிந்த அக்கணமே, அவர் என்னைக் கேட்ட கேள்வி, என்னைத் திகைக்கச் செய்தது. ஆம்.

என்னவோ? ஏதோ? என்று நீங்களும் திகைக்கிறீர்கள் அல்லவா? வாசகர்களே நாம் ஒருவரைக் காணவோ அழைக்கவோ சென்றால் சிறிது நேரமாவது தங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர் குடித்து, சிற்றுண்டியோ பேருண்டியோ முடித்து, ஊர்க்கதைகளை உசாவி - பின்னர்தான் புறப்படுவோம். இந்த வகையிலே ஊறிப்போன நம்பண்பாட்டில், எனக்கு அடிகளார் எழுப்பிய கேள்வி என்னைத் திகைப்படையச் செய்ததில் வியப்பில்லை 11-1-80 வெள்ளிக்கிழமை காலை அடிகளாரிடம்.

நான் உங்களை இன்னும் அரைமணி நேரத்தில் சந்திப்பேன் என்று போன் மூலம் அறிவித்துத்தான் சென்றேன். அவரும் என் வரவு பார்த்து வழிமேல் விழி வைத்து நின்றிருந்தார். சென்றேன். வணக்கம் என்று கூறி மாலை அணிந்தேன், இரு காலைப் பணிந்தேன். அக்கணமே அவர் கேட்ட கேள்வி புறப்படலாமா? என்ருர். சென்றவன் உட்காரக்கூட இல்லை. திகைத்தேன் ஒரு கணம். ம்.. புறப்படலாம் என்றேன். எதற்காக இதனைக் குறிப்பிடுகிறேன் என்ருல் 'காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது' என்று வாய்கிழியப் பேசுகிறோம். ஆனல் அதன் வழிச் செல்கிருேம் இல்லை.. சொல்லிய வண்ணம் செயலாற்றும் நிலையில் நாம் இருந்தால் சுதந்திரம் பெற்று முப்பத்து மூன்று ஆண்டுகளைக் கடந்த நம் இந்தியத்திருநாடு பொருளாதாரத்துறையில் எவ்வளவோ முன்னேறி இருக்கும்.

என்ன செய்வது? வாய்ச் 'சொல்லில் வீரரடி' என்று தெரியாமலா சொன்னுன் பாரதி. ஏன்? வள்ளுவனும் இதனைக் கூருமலா விட்டுவிட்டான். ம்...!

'சொல்லுவது யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'.

என்பதனை ஓர்ந்து உணர்ந்து இனியேனும் கடைப்பிடித்தால் நம் நாடும் வீடும் ஒருங்கே நலம் பெறும்.

என்னடா இவன்? எதையோ சொல்லி எங்கேயோ போகிருனே என்கிறீர்களா? ம்....அப்படியெல்லாம் போக மாட்டேன். உண்மையைத்தான் சொல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அடிகளாரிடம் நான் திகைத்தமைக்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட அவரது அரியபண்பு. காலத்தைப் பொன்னாகவும், கடமையைக் கண்ணாகவும் கருதுகின்ற அன்னாரின் உயர்ந்த உள்ளம் என்னைத் திகைப்படையச் செய்தது. மேலும்,

அடிகளார் இலங்கையில் இருக்கும்போதே அவருக்குக் கடிதம் எழுதினேன். அதாவது, சென்னையில் இருந்து அறுபது மைல் பயணம் செய்து அன்று இரவே நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலுமா? இயலாதா? ஓய்வு தேவையா? களைப்பாக இருக்குமே! என்ன செய்வது? எப்படிச் செய்வது? அன்று ஒருநாள் மட்டும் ஓய்வு எடுத்து மறுநாள் முதல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறீர்களா? என்றெல்லாம் கேட்டுக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் எழுதிய பதில் என்ன தெரியுமா? அறுபது மைல் பயணம் ஒன்றும் பெரிது அல்ல. அடியேனைப் பொறுத்த வரையில் வேலையின்றி இருந்தால் தான் களைப்பு. ஒருமணி நேரத் தியானத்துக்குப்பின் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று எழுதியிருந்தார். ஆம்.

அப்படி அவர் அன்று எழுதியமைக்கும் இன்று என்னைக் கண்டதும், புறப்படலாமா? என்று கேட்டதற்கும் உள்ள ஒற்றுமையை எண்ணியெண்ணி இன்றும் வியக்கிறேன். அன்று நான் அவரிடம் கற்ற முதல் பாடம் காலமறிந்து கடமையாற்ற வேண்டும். காலத்தை வீணாக்கக் கூடாது. நிகழ்ச்சிக்கு முன் கூட்டியே சென்றுவிட வேண்டும் என்ற நீங்காத நினைப்பு. இவைகளையெல்லாம் ஒரு கணத்தே அடிகளாரிடம் அன்று நான் கற்றுக் கொண்டேன்.

பின்னர், கடமையுணர்வும், பொறுப்புணர்ச்சியும், காலமறிந்து செயலாற்றுவதில் மிக்க கவனமும் கொண்ட அடிகளாரை அழைத்துக்கொண்டு ஒரு விநாடியும் தாமதியாமல் ஓட்டல் அதிபரிடம் விடைபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு டாக்சியின் மூலம் சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தை அடைந்தேன்.

டாக்சியை விட்டு இறங்கியதும் மீட்டர் காட்டும் கட்டணத்தொகையை ஓட்டுநரிடம் கொடுத்தேன். அவர் வாங்க மறுத்தார். காரணம் அவர் மீட்டர் காட்டும் கட்டணத்தைவிடக் கூடுதலாகப் பணம் கேட்டார். நான் கொடுக்க மறுத்தேன். காலம் கருதிச் செயல் ஆற்றும் அடிகளாரை வைத்துக்கொண்டு டாக்சி ஓட்டுநரிடம் நேரத்தை வீணடிக்க மனம் சம்மதிக்க வில்லை. இருந்தாலும் அவன் கேட்கும் அநியாய கட்டணத்தைக் கொடுத்துவிட்டுப் போகவும் மனம் இல்லை.

என்ன செய்வது? இருதலைக் கொள்ளி எறும்பானேன். நேரம் ஆனாலும் சரி! நியாயத்துக்காகப் போராடுவது நியாயமே? என்று என் மனதைத் தேற்றி அடிகளாரை ஆற்றி-டாக்சி ஓட்டுநரிடம் என்னதான் முடிவு என்றேன். அவனும் விடுவதாக இல்லை. நானும் கொடுப்பதாக இல்லை. என்நிலை தர்மசங்கடமாய்ப் போச்சு தர்மத்துக் குத்தானே சங்கடம். அதர்மத்துக்கு ஏது சங்கடம்? மேலும் நமது இதிகாச புராணங்களும் இதனைத்தானே உணர்த்துகின்றன. அந்த நேரத்தில் விடாக்கண்டன், கொடாக்கண்டன் கதை நினைவுக்கு வந்தது. கதையை யாரிடம் சொல்வது? கதை சொல்ல அதுவா நேரம்? ஐயகோ!

அடிகளார் வேறு உடன் இருக்கிறாரே என்ற அச்சமும் என்னுள் எழுந்தது. என்ன செய்வது? இருந்தாலும் நியாயம் தேவைதானே! ஓரளவு தெரிந்த என்னிடமே அடாவடி அடிக்கும் இந்த டாக்சி ஓட்டுநர் ஒன்றும் அறியாத அப்பாவி மக்களை எப்படி ஏமாற்றுவாரோ? மொழி புரியாத வேற்று நாட்டாரை எப்படி மிரட்டுவாரோ? என்றெல்லாம் எண்ணிப் பார்த்தேன். இதுவரை சும்மா இருந்த அடிகளார் அவனை அதட்டினார். போலிசில் ஒப்படைப்பேன் என்றார். 'மயிலே மயிலே என்றால் இறகு போடாது' என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான் போலும். இதோ பார் உன்னை என்ன செய்கிறேன் என்று போலீசைத் தேடுவது போல் பாவனை செய்தார்.

அப்போதுதான் இந்த உலகில் நல்லவனாக இருந்தால் போதாது. வல்லவனாகவும் இருக்க வேண்டும் என்றுணர்ந்தேன். வெறும் நல்லவனாக மட்டும் இருந்தால் இந்த உலகம் அவனைச் சாப்பிட்டுவிடும். பொல்லாத உலகம் இது. புரிந்து கொண்டு வாழணும். அடிகளார் போலீஸ் என்றதும் ஆணவத்தின் உச்சியிலே இருந்த டாக்சி ஓட்டுநர் சற்று அடிபணிய ஆரம்பித்தான். ஏதாவது போட்டுக் கொடுங்க என்றான். சரி போனால் போகட்டும் என்று உரிய கட்டணத்துக்குமேல் ஒரு ரூபாய் போட்டுக் கொடுத்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றேன்.

ஐயோ பாவம்.... போகட்டும் என்று விட்டோம். இன்னும் போலீசுக்குப் போனால் கதை எப்படிப் போகுமோ? யார் கண்டது? 'யாரைத்தான் நம்புவதோ? பேதை நெஞ்சம், அம்மம்மா பூமியிலே யாவும் வஞ்சம், என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது. மேலும் வேலியே பயிரை மேய்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஏன் இந்த வம்பு? என்று அத்துடன் அந்த விவகாரத்தை விட்டுவிட்டு இறைவனுக்கு நன்றி சொல்லி பேருந்து நிலையத்தின் உள்ளே சென்றேன். செல்லும் போது அடிகளார் நல்லவராகவும் வல்லவராகவும் இருப்பதை எண்ணி இன்புற்றேன்.

அடிகளாரிடம் இது பற்றி வினவினேன். உலகமெல்லாம் சுற்றும் எனக்கு இது ஒரு கலை. இதுவும் தேவை என்றார். இதெல்லாம் இல்லையென்றால் உலகைச் சுற்ற இயலாது. தைரியம் தேவை என்றார். அடிகளாரிடம் நிறைய கற்றுக்கொள்ள ஆண்டவன் எனக்களித்த வாய்ப்பை எண்ணி-நான் மிகவும் மகிழ்ந்தேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உள்ளே செல்லவும் காஞ்சிபுரம் செல்லும் பேருந்து புறப்படவும் சரியாக இருந்தது. நல்ல நேரம்.. பேருந்திலே அடிகளாருடன் ஏறி அமர்ந்தேன். இந்தப் பேருந்து நிலையத்தைக் கண்டதும் என்ன நினைவில் எழுகிறது என்றார். இந்தப் பேருந்து நிலையத்தை நோக்கிப் பல பேருந்துகள் வருவதும், பல பேருந்துகள் போவதுமாக உள்ளன. இதனை எண்ணும் போது உலகமாகிய பேருந்து நிலையத்தை நாடிப் பலர் வருவதும்; பலர் போவதுமாக-அதாவது பிறப்பு இறப்பு என்பதை உணர்த்துவதாக உள்ளன என்றேன். அடிகளார் மெல்லச் சிரித்து, சரியாகச் சொன்னீர்கள் என்றார். அதில் இருந்து தத்துவங்களையெல்லாம் எளிமையாக்கிப் புரியும் வண்ணம் மக்கட்குத்தரவேண்டும் என்பதில் இவர் கொண்டுள்ள இதய வேட்கை எனக்குப் புரிந்தது. இன்னும் எவ்வளவோ அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று என்மனம் என்னைத் தூண்டியது.

ஆனால், அடிகளாரோ பேருந்தில் ஏறி அமர்ந்ததும் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். நானும்... இருக்கட்டும் - எங்கே போய்விடப் போகிறார்? அவரைத் தான் சிக்கெனப் பிடித்துக்கொண்டோமே! தெரிந்து கொண்டால் போகிறது, என்று என் மனதைத் தேற்றி அமைதியில் ஆழ்ந்தேன், பல தத்துவக் கதைகளை எழுதி ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற அடிகளாரிடம், பல்கலைக் கழகத்திடம் பயிலும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி இன்புற்றேன். எங்கள் பேருந்தும் அடிகளாரை ஏற்றிக்கொண்ட மகிழ்ச்சியால் விரைந்து புறப்பட்டது. சென்னையில் இருந்து விடை பெற்றோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவசமய கலாச்சாரம்

# குன்றும் அபாயம்

அநுராதன்

அண்மையில் ஒரு பல்கலைக் கழக துணைவேந்தர் தாம் ஆற்றிய சொற்பொழிவில், மனிதர் தொழில்—லெளகீக— மேன்மையை மட்டும் சிந்திக்காமல் ஆன்மீக வாழ்வில் முன்னேறவும் பல வழிகளிலும் முயற்சி செய்வதன் அத்தியாவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளார். தமது சொந்த நலனை மட்டும் மனதிற் கொள்ளாது உலக நன்மை பற்றியே சதா சிந்தனை செய்து வரும் மேலோர் தற்போது மேற்கூறிய விஷயம் பற்றி சிந்தித்து வருவது பலருக்கும் ஆறுதல் தருவதாயுள்ளது.

சமயங்கள் அத்தனைக்கும் தாயாகவும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலகம் அனைத்துக்கும் தண்ணிழல் பரப்பி வருகிற தெய்வீக ஆலவிருட்சம் போன்று விளங்கும் எமது வைதிக சைவ சமயமானது பழமைக்குப் பழமையானதாகவும் புதுமைக்குப் புதுமையானதாகவும் எக்காலத்துக்கும் ஏற்ற நல்ல கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனினும் இந்த ஒப்பற்ற உன்னதமான உண்மை புதிய தலைமுறையினருக்குப் புகட்டப் படாதது மிகப் பெரிய குறை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். இவ்வாறு சமய உண்மைகளை அறியாது வெளிநாடுகளுக்குப் போகும் இளைஞர்கள் சமாளிக்க முடியாத பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்கும் போது பரிதாபகரமாக தத்தளிக்க வேண்டி ஏற்படும்.

நட்டாற்றில் தத்தளித்த ஒருவன் ஆற்றில் மிதந்து செல்வது கரடி என்பதை அறியாமல் கம்பளி மூட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நினைத்து அதைப் பற்றுக்கோடாக எண்ணி மீளாத் துயருக்கு ஆளானது போல, எமது இளந்தலைமுறையினரும் எமது இனம் - மதம் - மொழி-கலை-கலாச்சாரம் பண்பாடு - ஆன்மிக வளம் - ஆகியவற்றைச் சிறிதும் உணராது அன்னியக் கொள்கைகளையும் ஆன்மிகத்துக்கு ஒவ்வாத மிருக வாழ்வுக்கு அடிகோலும் நடைமுறைகளையும் கடைப்பிடிப்பது எமது சமூகக் கட்டுக்கோப்புக்கும் மனிதப் பண்புக்கும் இழிவுதேடும் பெருங்கேடாய் முடியும்.

இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்வோர் செயல் உள்நாட்டிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயங்களையும் நாம் சிந்திப்பது அவசியம். ஒரு சில மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றோர் குறிப்பிட்ட ஓர் இரு மதங்களைச் சேர்ந்தோருக்கே அங்கு சலுகைகள் உண்டு என்றும் ஏனையோர் சமய அனுட்டானம் செய்வது முடியாத காரியம் என்றும் விஷமிகள் சிலர் பரப்பிய வதந்திகளால் பாதிக்கப்பட்டதைப் பலரும் அறிவர். இந்த உண்மைகளையும் தற்போதைய நிலையையும் பெரியோரும் அறிஞரும் உணர்ந்து நடைமுறைச் சைவ சமயக் கோட்பாடுகளை உலகில் எப்பகுதியிலும் தொழிலின் பொருட்டுச் சென்று வாழும் இளைஞர் பலரும் கைக்கொள்ளும் வகையில் அவர்களுக்குப் புகட்டுவதும் அவர்களது முன்னேற்றத்தை அவதானிப்பதும் காலதேவன் வேண்டி நிற்கும் அரிய பெரிய தொண்டாகும்.

**பிறவி அடங்கும் வழி**

இந்திரியம் அடங்க— கரணம் அடங்கும்
கரணம் அடங்க— பிராணன் அடங்கும்
பிராணன் அடங்க— மூலம் அடங்கும்
மூலம் அடங்க— குண்டலி அடங்கும்
குண்டலி அடங்க— பிந்து அடங்கும்
பிந்து அடங்க— பரை அடங்கும்
பரை அடங்க — பரிசுத்தப் பிரம்மமாவார்

(சச்சிதானந்தசற்குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்த சாதகம்

குரு. ஆ. கந்தசாமி ஐயா - திருச்சி

சுத்த சாதகம் என்னும் அறம்பெறல் நூலின் வீர சைவ உயர்ந்த நன்னெறியை, திருக்கைலாய பரம்பரையைச் சார்ந்த விருத்தாசலம் குமாரதேவர் அருளிய அமுத வாக்கினை இச்சிறிய உரையாக எழுதுகின்றனம்.

குமாரதேவர் திருவாய் மலர்ந்தருளிய பதினாறு நூல்களுள் தலைசிறந்தது சுத்தசாதகம் என்னும் நூலாகும். இந்நூலை வடலூர் இராமலிங்க வள்ளலார் அனுபவ நூலாக்க் கொண்டு திருவருட்பாவில் தமது சமரசசுத்த மார்க்கக் கோட்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாக அடுத்தடுத்து சுத்தசாதகக் கருத்தமைந்த பாடல்களைக் கூறுவார். அன்றாது சுத்த சித்தாந்த இலக்கியத்திற்குச் சிறந்த மேற்கோளாக விளங்கும் நன்னூலெனவும் இதனை அறிகின்றோம். இத்தகைய தலையாய கருநூலங்கள் இந்நாளில் கிடைத்தற்கரிதே என்றுங்கூறலாம்.

இன்றுள்ள உலக சமுதாயத்துள் இறைவழிபாடு பலர் பலவாறாகச் செய்து வருவதை நாம் அறிகின்றோம். ஆனால் அறிஞர்கள் தத்துவஞானிகள் இறைவனிடம் தன்னை அர்ப்பணித்து இறைவழிபாடு செய்யும் பரமபக்தர்கள் என்று கூறலாம். இவற்றுள் உருவ வழிபாடு, அருவ வழிபாடு என்று இருவகை உண்டு. சிவலிங்க தாரணம், சிவலிங்க வழிபாடு என்பது உருவ வழிபாடு அல்லது அருவ வழிபாடு என்றே கூறலாம். இது பக்குவ நிலைக்குத் தக்கவாறு மாறும். லிங்காயத்துக்கள் என்பது

''எந்தையே ஈசா என் உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மணிவாசகர் கருத்திற்கிணங்க இறைவனை லிங்கவடிவாகத்தன் உடலில் தரித்திருப்பது ஆகும். லிங்கம் அருவுருவத் திருமேனி ஆதலால் சிவலிங்க வழிபாடு ஒரு வகையில் அருவ வழிபாடே ஆகும்.

இந்தியா முழுவதும் வானளாவிய கோபுரங்கள் அமைந்த திரு ஆலயங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம். நம் ஆன்றோர்கள் வழி வழியாக இதனைப் பின்பற்றிப் போற்றி வழிபடுவதால்தான் நமக்கும் இதன் வழிபாடு கிடைக்கப் பெற்றுள்ளோம். இவைகள் எல்லாம் அழியாத ஆன்மீக பொக்கிஷமாகும். மனித குலம் இப் பூவுலகில் வாழும் பரியந்தம் இவ்வாலயங்கள் போற்றியே பாதுகாத்துவரும். இது மனித முயற்சி மட்டும் அல்ல. அருள் வடிவினனான இறைவன் பாமர மக்களை உய்விக்கவே திருவருள் துணைகொண்டு பெருகிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம்.

வீரசைவம் என்னும் பெருநெறி வழக்கில் மறைக்கப்பட்டும், அதனைப் பின் தொடர்ந்து வரும் மடங்கள் ஆலயங்கள், அடியார்கள் மிக மிகக் குறைவே என்று கூறலாம். காரணம் என்னவென்றால் சைவ நெறியையே சிலர் வீர சைவநெறி என்று அறியாமையால் தன்னை ஏமாற்றிக் கொள்ளுவதல்லாமல் தன்னைச் சார்ந்தவர்களையும் ஏமாற்றுவதேயாகும்,

ஆன்மாக்களது பக்குவத்துக்கீடாக வேதாகமங்களில் மோட்ச மார்க்கத்தைப் பலவாறாகக் கூறியிருக்கின்ற அவற்றுள் உத்தம பக்குவர்க்குணர்த்தும் பொருட்டு சாம வேத முடிவில் சொல்லும் ''தத்துவமசி'' மகாவாக்கியானுசார உபநிடதப் பிரதிபாதமாகிய சுத்தமார்க்கத்தைச் சிவபெருமான் ஓர் கால் உமாதேவிக்கு உபதேசித்ததை விருத்த சைலமென்னும் புண்ணிய தலத்திலெழுந்தருளி விளங்கும் விருத்தாம்பிகையே, குமாரதேவருக்குப் பொற்கிண்ணத்தில் தனது திருக்கரத்தால் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஞானப்பாலைப் புகட்டி தன்மை வடிவாக அவரது உள்ளத்திற் பிரவேசித்து நின்று அபரோட்சமாகவும், பின்பு படர்க்கை வடிவான சாஸ்திர ரூபமாக அவரது வாக்கினிடமாக நின்றுணர்த்த உணர்ந்து விளக்கிய நூலே 'சுத்தசாதகம்' என்ற அருள் நூலாகும்.

''தத்துவமசி'' என்னும் தொம்பதம், தற்பதம், அசிபதம் என்னும் மூவித காண்டங்களும் சாமவேதத்தில் உத்தாபாகம் என்னும் நூலில் பிரம்ம ஜாபல மென்னும் உபநிடதமே வீரசைவ மார்க்க மென்னும் சுத்தமார்க்கத்தை விளக்கிக் கூறியமையால் இதுவே முதல் நூலென்றும், வழிநூலென்றும் விளங்குகின்றன.

தொம்பதமென்னும் கிரியாமார்க்கம், சைவர்களுக்கும், தத்பத மென்னும், உபாசனா மார்க்கம் வைதீகர்களுக்கும் அசிபத மென்னும் சுத்த மார்க்கம் அங்கலிங்க ஐக்கியமான சுத்தமார்க்கம் என்று விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

## திரைமறைவில்

ஒரு ஆசிரியர் தனது மாணவர் இருவரை அழைத்து, ''இங்கே இரண்டு வாழைப் பழங்கள் இருக்கின்றன. ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொள்ளுங்கள். யாரும் உங்களைக் காண முடியாத இடத்துக்குப் போய் அதனைத் தின்று விட்டு வாருங்கள்'' என்று கூறினார்.

ஒருவன் ஒரு பழத்தை எடுத்தான். அறையை மூடினான்: பழத்தைத் தின்றுவிட்டான்.

மற்றவன் புத்திசாலி; இறைவன் எங்கும் நிறைந்திருப்பதை அவன் உணர்ந்தான். பழத்தை தின்னாமல் அவன் ஆசிரியரிடம் வந்தான்.

நீதி: இறைவன் எங்கும் இருக்கிறார். அவர் நமது செயல்கள் அனைத்தையும் மௌனசாட்சியாக இருந்து கவனித்துவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பினில்விளைந்த ஆரமுது

முத்தமிழ் அரசு, சைவச் செங்கதிர், வித்துவான்
புலவர் இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
பேராசிரியர், பல்கலைக் கல்லூரி,
தருமபுரம், மாயூரம்

## சிந்தனை ஓட்டம்:

நெகிழ்ச்சியும், உருக்கம், அருளனுபவ வெளிப்பாடும் திருவாசகத்துள் காணப்படுவன போல், தமிழ் நூல்களுள் யாண்டும் காணப்படவில்லை. இதனை ஓர் அன்பிலக்கியம் எனவும், அருளனுபவப் பெட்டகம் எனவும் சான்றோர் பலரும் பாராட்டிப் போற்றுவர். அறிவியலும்–அருளியலும், இன்பியலும்–உலகியலும் திருவாசகத்துள் காணப்படினும், அன்பின் இயல்பைத் திருவாசகம் ஏதோ ஒரு நோக்கில் விரிவாக வரையறுத்திருக்கவேண்டும். இல்லையென்றால், அன்புக் கருவூலமாக–அன்புப்பிழம்பாக–அன்பின் பயனாக இதனைத் தண்டமிழ்ச் சான்றோர் பெரிதெடுத்துப் போற்றியிருக்க இடமில்லை. திருவாசகத்துள் அன்பியல் பொங்கும் அருமைப்பாட்டை ஒரு கோணத்தே நின்று பார்க்கும்போது ஏற்படும் புதுமைகள் எவ்வளவு நலமுடையனவாக நம்மை ஈர்க்கின்றன! அதைக்காண முயலும் முயற்சியில் நம் சிந்தனை ஓட்டத்தை எங்கெங்கோ கொண்டு செல்கிறோம்.

## சுவையனுபவம்:

நுண்பொருள்களை அறிவிற்கே புலப்படுவன எனவும், அனுபவத்திற்கு மட்டுமே வருவன எனவும் இரண்டு வகைப்படுத்தலாம். கற்கண்டின் சுவைபற்றி ஒரு மணிநேரம் விளக்கமுடியும்: என்றாலும், கேட்பான் நாவில் கற்கண்டின் சிறு கூறு படும்போதுதான் சுவையனுபவம் நிறைவு பெறமுடியும். பொதுவாகவே, நாம் ஒட்டி உறவாடும் பொருள்களையும், நம்மோடு மிகநெருங்கிய தொடர்புடையவரையும் ஆராய்வதும் இல்லை. ஆராய முற்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுமில்லை. குணங்களும்—சுவைகளும் நமக்கு மிக உறவு டையன. ஆயினும் அவற்றை இன்ன இலக்கணத்த என வரையறுத்துக்காட்டவோ, தெளிவுபட வுணர்த்தவோ நாம் முயன்றதே இல்லை. இந்தக் குறைபாடே அன்பியல் பற்றி ஆராயத் தடையாக நிற்கிறது. அன்பாவது யாது என்ற வினுவிற்கு ஒரு சரியான வடிவத்தை வரையறுத்துக் கொண்டாலன்றி அவ்வியல் பற்றி திருவாசகக் கண்ணோட்டம் முழுமையாக அமையமுடியாது. அன்பை அறியாதார் யார்? நம்மால் நாளும் நாளும் உணரப்படுவதாகிய அன்பை, நாம் உணர்ந்த அளவு, இலக்கணங்காட்டி விளக்கும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. பின், அன்பினை விளக்குவதுதான் எங்ஙனம்? நம் சிந்தனை ஓட்டத்தில் எண்ணற்ற செந்தமிழ் இலக்கியங்கள் நிழலாடுகின்றன. எங்கேனும் அன்பு விளக்கப்பட்டிருக்கிறதா? சிந்தனையைக் கூர்திட்டுகிறோம்.

## முப்பாலுள் ஏமாற்றம்:

'எல்லாப்பொருளும் இதன் கண் உண்டு' என்ற நினைவோடு திருக்குறளில் 'அன்புடைமை' என்ற அதிகாரமே அமைந்திருப்பதை நினைக்கிறோம். 'வாய்மை எனப்படுவது யாதெனின்' என வினவி விடைதரும் ஆசிரியர், 'பழமை எனப்படுவது யாதெனின்' எனக்கேட்டு மறுமொழிதரும். வள்ளுவப்பெருந்தகை, 'பேதமை என்பதொன்று யாதெனின்' என விஞவிக் கொண்டுவிளக்கும் அற இலக்கிய முதல்வர், அன்பாவது யாதென விளக்குகிருரா என விரைந்தால், அங்கும் ஏமாற்றமே நிற்கிறது. அன்பின் சிறப்பும்-அன்பின்மையால் விளையும் தீமைகளும் சுட்டப்படுகின்றனவே தவிர அன்பிலக்கணம் அங்கே விளக்கப்பெறவில்லை. 'ஆர்வலர் புன்கணீர்' பற்றிய குறிப்புக்கூட அன்பின் மறைக்கமுடியா இயல்பினை விளக்க வருகிறதேயன்றி, அன்பின் இலக்கணமாகக்கொள்ளப் பயன்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவுதாரா நெய்தற்கலி:**

ஆற்றுதல்-போற்றுதல், அறிவு, நிறை-முறைசெறிவுபோன்ற நுணுக்கப் பண்புகளை விளக்கும் நெய்தற்கலி, அன்பினைப் பற்றிச் சிறு குறிப்புத் தருகிறது. 'அன்பெனப்படுவது தன் கிளைசெருஅமை' என்ற அக்குறிப்புக்கூட, தெருளாத அகப்பொருள் தலைவனைத் தெருட்டித் தலைவியை அவனொடு கூட்ட முயன்ற தோழியின் அப்போதைக்குபகாரப்படும் விளக்கமாக அமைகிறதேயன்றி நிறைவுபெற்றிருக்கவில்லை.

**இலக்கண உறவு:**

பாலை நிலமாவது யாது என்ற குறிப்பினைத் தொல்காப்பியம் தரவில்லை. ஆனால், பின்தோன்றிய சிலம்பு நில அமைப்பை அழகுபட அமைத்துக்காட்டுகிறது. இலக்கணத்திற்கு—இலக்கியம் அங்கே நலஞ்சேர்ந்தது போல, அன்பாவது யாதென்ற இலக்கிய ஆய்வு வினவிற்கு, ஓர் அகப்பொருள் இலக்கணநூல் திட்டவட்டமான விடைதந்து நிறைவு செய்யும் அருமைப்பாட்டை நினைக்கையில் இலக்கண-இலக்கிய உறவின் இன்றியமையாமை நம்முன் உறுதி பூத்துத் துலங்கக் காண்கிறோம்.

**களவியல் அன்பு:**

பொருளிலக்கண நூல் பெறுது கவன்று நின்ற பாண்டி மன்னனுக்கு ஆலவாயில் அழல் நிறக்கடவுள் கருணை மீதூர்ந்து அருளிய பெருஞ் சிறப்புடையது; களவும் கற்புமாக அறுபது நூற்பாக்களானியன்ற 'இறையனார் களவியல்' என்ற அருநூல், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கடைச்சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய நக்கீரர் பெயரால் அந்நூற்கு அமைந்த செந்தமிழ் நலமிக்க பேருரையில், நாம் காணவிழைந்த அன்பின் இலக்கணத்தைப் பூரணமாகக் காண்கின்றோம். அகப்பொருள் தலைவன் தலைவியரிடையே எழும் காதல் அன்பினையே நக்கீரர் உரை விளக்க வருகிறது. குடத்துள் விளக்கிருக்கலாம்; வெளியில் தெரியாது. நம்ப மறுப்பானைத் திறந்து காட்டி இதோ பார் இதனுள் விளக்கு என அறிவிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்து அன்பை அங்ஙனம் திறந்து காட்டமுடியுமா? நக்கீரர் வினவுகிறார். பின், அன்பினை அறிவதுதான் எங்ஙனம் என்ற வினாவிற்கு அவரே விடை தருகிறார்.

"அன்பாவது........, குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல, இதுகாண் அன்பு என்று போதத்திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற் பாற்று" எனவே அன்பை அதற்குரிய குணங்களின் வெளிப்பாட்டால் அறியக்கூடுமெனப் பேச வரும் நக்கீரர் மேலும் விளக்குவார்.

"அன்புடையரான குணம் யாவையோ எனின் (1) சாவிற்சாதல் (2) நோவில்நோதல் (3) ஒண்பொருள் கொடுத்தல் (4) நன்கினிது மொழிதல் (5) புணர்வுநனி வேட்டல் (6) பிரிவு நனி இரங்கல் என இவை".

ஒத்த அன்புடையார் எனப் பாராட்டப்படும் தலைவன் —தலைவியரிடை நிகழும் அன்பின் திறத்தை அனுமானித்துக்கொள்ள மேற்கண்ட ஆறு நிலைக்களன்களை வகுத்துக் காட்டுகிறார். 'தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடுநர் போல்' 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என உயிர் நீத்த பாண்டிமாதேவியின் வாழ்வில் அன்பின் வெளிப்பாடு 'சாவிற்சாதல்' என்ற நிலைக்களத்தே வைத்து உணர்ந்து கொள்ளப்படுகிறது. தலைவனின் துயரத்திற்குத் தான் நோதலும், தனக்குரிய உடைமைகளை எல்லாம் அவனுக்கே ஈந்துவிடும் பேரன்பு, தலைவனுடைய பெருஞ் சிறப்புக்களைப் பலபட எடுத்தியம்பி நிறைவுகாணும் காதல் நெஞ்சு, அவனோடு கூடி மகிழ எண்ணும் பெரு வேட்கையின் வெளிப்பாடும், அவனைப் பிரிந்துறையும் காலத்தே அப்பிரிவாற்றாது கழிபெரும் ஆற்றாமை கொண்டு புலம்புதலுமாகிய நிகழ்ச்சிகளின் நிலைக்களத்தின்மீதே ஒரு தலைவியின் அன்புடைமையின் ஆழத்தை அறிந்து கொள்ள முடியுமென்ற நக்கீரரின் விளக்கந்தான் எத்தனை ஆழமுடையதாக விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகவியலும் அருளியலும்:**

குறைவிலா நிறைவாய் விளங்கும் இறைவன் ஒருவனே தலைவன் எனப்படுவான். சிற்றறிவும், சில வாழ் நாளும் பெற்ற உயிர்கள் யாவும் அவன் முன்னிலையில் தலைமை இழந்து, அவன் திருவடிப் பேறெய்த முயலும் முயற்சியும், வேட்கையுமுடைய தலைவியர்களாகவே விளங்குகின்றன என்பதுவும் அருளாளர்கள் வலியுறுத்தி யிருக்கும் சமயக் கோட்பாடுகள் என அறிகிறோம். புற உலகத்தே ஆடவர் – பெண்டிரிடையே தோன்றும் அன்பிற்கு வகுத்த அதே இலக்கணத்தை அகவாழ்வாகிய அருளியல் வாழ்விலும் கொண்டு கூட்டி ஆராய முற்படுதல் மிகப் பொருத்தமாகவே அமையும்.

ஒப்பற்ற ஆன்மநாயகனாகிய சிவபெருமான் திருவடிக்கு மாணிக்கவாசகராகிய நாயகி வைத்த அன்பை மேற்கண்ட அன்பிலக்கணத்தோடு தனித் தனி இணைத்துக் காண்கையில் திருவாசகத்தே அன்பியல் நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்து கிடக்கும் பாங்கு நம் நெஞ்சத்தே தேன் பாய்ச்சிச் சிலிர்க்க வைக்கிறது.

**சாவாமூவாப் பெரியன்:**

அகவாழ்விற்கு—காதல்வாழ்விற்கு உரைத்த அறுவகை அன்பின் நிலைக்களன்களுள் 'சாவிற்சாதல்' என்ற ஒன்று அருளியல் அன்பில் வீழ்ந்து படுகிறது. சாவாமூவாப் பெரியனாகிய சிவபெருமானுக்கு முன் ''சாவிற்சாதல்' என்ற இலக்கணம் வலிவிழந்ததனால், அஃதொழித்து எஞ்சிய ஐந்து நிலைக்களன்களிலேயே மணிவாசகர் காட்டும் அன்பின் ஆழத்தை உணர முடிகிறது.

**ஐயமும் தெளிவும்:**

ஒருகோணத்தே நின்று திருவாசகப் பாடல்களை ஆராய்ந்தால், இந்த ஐந்து நிலைக்களன்களுக்குள்ளேயே அனைத்துப் பாடல்களும் சென்றமைந்து திருவாசகமே அன்பியல் நூல் என்ற முடிவை நமக்கு வழங்கும் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலே ஐயமில்லை. நக்கீரருடைய இலக்கணமே, திருவாசகத்தில் மிளிரும் அன்பின் திறன்கண்டே அமைத்துக் கொள்ளப்பட்டதோ என்ற ஐயம்கூட எழுகிறது. இறையனார் களவியல் உரை, மிகப் பிற்காலத்தே திருத்தி அமைக்கப்பட்டது என்ற கருத்தும், திருவாசகம் மூவர் தேவாரத்திற்கும் முற்பட்டது என்ற கருத்தும் உறுதிப்படுமானால், இந்த ஐயம் உண்மையாகவேகூட அமைந்துவிட இடமுண்டு என்றே நம்பமுடியும்.

சிறு கட்டுரைக்கண் அனைத்தையும் வகைப்படுத்தித் தொகுத்தல் இயலாது என்பதுமட்டுமன்று, தேவையற்றதும் என்பதால் அன்பின் நிலைக்களன்களின்மீது ஒன்றிரண்டு திருவாசகப் பாடல்களை, அல்லது வரிகளைக் கோடிட்டுக் காட்டுவதே திருவாசகச் சிந்தனையுள் திளைப்பார்க்குப் போதுமானது என்று கருதுகிறேன். அந்த முடிவில் 'நோவில்நோதல்' என்ற நிலைக்களத்தை நோக்குகிறோம்.

## புண்சுமந்தபொன்மேனி:

தன்னளவில் நோதல் என்பது இறைவனுக்கு இன்றேனும், அன்பு நெஞ்சம் அவன் நொந்து வாடுவதாகக் கருதி, தானும் நோவதனை உலகியல் வாழ்விலும் காணமுடிகிறது.

விண்சுமந்த கீர்த்தியும், பெண்சுமந்த பாகமும் கொண்டு நெற்றிக்கண் சுமந்த கடவுள் தன் பொருட்டு மண் சுமந்தானே என்ற ஆற்றாமையால் விளைந்த கழிவிரக்கமும், மண் சுமந்த பொன்மேனி புண் சுமந்ததே என்ற நெஞ்சத்தின் அழுகையும் அவன் நோவிற்குத் தானும் நொந்து அழியும் மாணிக்கவாசகரின் அன்பினை அற்புதமாக எடுத்துக்காட்டும் பாங்கினை அம்மானை விளக்குகிறது.

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்திசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலில் இறைவன் திருமேனி புண்பட்டு நொந்ததாக அன்பால் கருதித் தானும் நோகும் மணிவாசகரின் அன்பின் வெளிப்பாட்டைக் கண்டு மகிழ்கிறோம். மயிலுக்குப் போர்வையும், முல்லைக்குத் தேரும் ஈந்த வள்ளல்களின் செயல்களிலே காணப்படும் 'நோவில் நோதல்' திருவாசகத்துள் இறையன்பாக மலர்வதை அறியமுடிகிறது.

## ஒண் பொருள் கொடுத்தல்:

'வஞ்சித்தென் வளை கவர்ந்தான்' என்ற தொடரும் 'தன் நாமம் கெட்டான்' என்ற தொடரும் விளங்கும் கருத்துக்களில் தனக்கென ஏதுமின்றி யாவும் தலைவனுக்கே என்று அர்ப்பணித்துவிடும் பேரன்பைப் பார்க்கிறோம். அப்பர் பெருமானின் இத்தொடர்களிலும் ஓர்படி மேலே சென்று மாணிக்கவாசகர் ஒண்பொருள் கொடுத்து அன்பு செய்யும் நெருக்கத்தைக் கண்டு உள்ளம் நெகிழ்கின்றோம். ஒண்பொருள் கொடுத்தல் என்ற நிலைக்களத்திற்கு முழுமையான இலக்கியமாகத் திகழும் திருவாசகம் நெஞ்சில் தானே வெளிப்படுகிறது. குருந்தமர நிழலில் உன் கோலத் திருமேனிகாட்டி என்று ஆட்கொண்டாயோ அன்றே யாவும் நினதாக்கினேன், என்ற மணிவாசகத்துள் அன்பின் ஆழத்தை இனங்கண்டுகொள்கிறோம்.

'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு
நாயகமே'

என்று மணிவாக்கில் அன்பு பூத்துக்குலுங்கிப் பொலிவதனைக் கண்டுகொள்ளமுடிகிறது. 'தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை' என வேறிடத்தும் பலபடப் பேசும் மணிவாசகரின் அன்பினை 'ஒண்பொருள் கொடுத்தல்' என்ற நிலைக்களத்தே அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் தவிர்க்க வேண்டியவை

எவ்வளவோ பாவங்களை தெரிந்தும் தெரியாமலும் செய்கிறோம். மனம், வாக்கு, காயம் இவைகளால் என்ன பாவங்கள் செய்கிறோம் என்ற பட்டியலைப் பார்ப்போம்.

**I. உடலால் செய்யப்படும் பாவங்கள்:–மூன்று வகை.**

1. பிராணாதிபாதம்:– இம்சை புரிதல், தன் கையில் ரத்தக்கறைபடும்படி காரியம் செய்தல், கொலை செய்தல், பிராணிகளிடம் இரக்கமின்மை.

2. அதின்னா தானம்:– திருட்டு; பிறர் பொருளை அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்ளுதல்.

3. பிறர் மனை விழைதல்:– அந்நியருடைய மனைவியிடம் ஆசை வைத்தல்.

**II. வாயினால் செய்யப்படும் பாபங்கள்–நான்கு வகை.**

1. பொய் பேசுதல்:– தெரியாத ஒன்றைத் தெரியும் என்று சாதித்தல், காணாத ஒன்றைக் கண்டதாகச் சொல்லுதல், ஒன்றை பார்த்து விட்டு பார்க்கவில்லை என்றல், தனக்காகவோ பிறருக்காகவோ அல்லது சிறிது லாபம் கருதியோ பொய் சொல்லுதல்.

2. கோள் சொல்லுதல்:– கலகம் மூட்டும் நோக்கத்துடன் இங்கு கேட்டதை அங்கும் அங்கு கேட்டதை இங்கும் சொல்லுதல், நண்பர்களைப் பிரித்தல். ஏற்கனவே உள்ள பிரிவை மேலும் விரிவாக்குதல். விரோதம் உண்டாக்கும் வகையில் பேசுதல்.

3. கடுமையான மொழி பேசுதல்:– ஆத்திரத்தோடும் அருவருக்கத்தக்க முறையிலும், பிறருக்கு வருத்தம் அளிப்பதாகவும் கோபம் நிரம்பியதாகவும் பேசுதல்.

4. பிரலாபித்தல்:– சமயம் அறியாமல் பேசுதல். காரணமின்றி வாயில் வந்ததை உளறுதல். நியாயத்திற்கு மாறான பேச்சு,

**III. மனதினால் செய்யப்படும் பாபங்கள் மூன்று வகை.**

1. அபித்யா:– பிறர் பொருளை விரும்பல். தன்னுடையதல்லாத ஒன்று பிறரிடம் இருப்பதைப் பார்த்து அது தனக்கு கிடைக்காதா என்று எண்ணி ஏங்குதல்.

2. வியாபன்ன சித்தம்:–இவை அழிந்து போகாதா? இவை தொலையாதா என்று துவேஷத்தினால் நினைத்தல்.

3. மித்யா திருஷ்டி:– தாறுமாறான எண்ணங்களைக் கொள்ளுதல். தானத்தால் என்ன பயன்? யக்ஞம் செய்பவர்கள் என்ன கண்டார்கள்? புண்ணியமாவது? பாபமாவது என்றெல்லாம் எண்ணுதல், இவைகளை செய்யாதிருக்க அம்பிகை அருள் செய்யட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00.

# சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! வணக்கம்

பத்திரிகைத்தாள் விலை உயர்வு, அச்சிடும் செலவுகள், அனுப்பும் செலவுகள் அதிகரிப்புக் காரணமாக இனிமேல் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை

## "ஆத்மஜோதி"

வெளிவரும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

இந்த ஒழுங்கின்படி பங்குனி - சித்திரை மாதச் சுடர்கள் ஒன்றாக வெளிவந்துள்ளன.

# சந்தா விபரம்

| | |
|---|---|
| இலங்கைக்கு | ரூபா. 15-00 |
| இந்தியாவுக்கு | ரூபா. 20-00 |
| இதர நாடுகள் | 5 வெள்ளி |
| ஆயுள் சந்தா | ரூபா. 300-00 |
| தனிப் பிரதி | ரூபா. 1-25 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி – (ஸ்ரீ லங்கா)

ஆசிரியர்: நா. முத்தையா
அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் – நாவலப்பிட்டி.
அச்சிட்ட திகதி: 11-4-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org